பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kālaikāthir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 30 வியாழக்கிழமை 15.08.2019 கதிர் 283

இனிது ரகசியம் அல்ல!

வடக்கில் பல விடயங்கள் கைக்கெட்டியும்வாய்க்கெட்டாதநிலைமை தான்.

அதில் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இருதய சத்திரசிகிச்சைப் பிரிவுஎனலாம்.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக இருதய சத்திர பக்கம் 02

ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவையும் செயற்குழுவையும் ஒன்றாகக் கூட்டி வாக்கெடுப்பு நடத்த ரணில் தீர்மானம்!

சஜித்தைக் கட்டுப்படுத்த புதிய தந்திரோபாயம்; திங்கள் அல்லது செவ்வாய் கூட்டம்

கொழும்பு,ஓகஸ்ட்15

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முடிவெடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவையும்,செயற்குழுவையும் ஒரே நேரத்தில் கூட்டவுள்ளார் அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

வரும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை இந்த கூட்டம் நடக்கவுள்ளது. பக்கம் 02

நேற்று முன்தினம் நடந்த ரணில் – சஜித் சந்திப்பு!

சனியன்று மீண்டும் பேசுவர்

கொழும்பு,ஓக.15

ஐக்கியதேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து குறித்து கட்சிக்குள் குழப்பநிலை நிலவுகின்ற சூழலில் பிரதமர் ரணில் விக்கிரம பக்கம் 02

யாழ்ப்பாணத்தில் பிரதமர்

வடக்கிற்கானமூன்று நாள்விஜயத்தைநேற்று ஆரம்பித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியாவில் பல்வேறு பக்கம் 02

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மடு அன்னை திருவிழா இன்று

மன்னார், ஓக. 15

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் மன்னார் மடுத் திருப்பதியில் மடு அன்னையின் ஆவணித் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது. பக்கம் 02

யாழ். பல்கலை மாணவர்கள் இன்று வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

மூன்று கோரிக்கைகளைமுன்வைத்துயாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று வியாழக்கிழமை தமது கல்வி நடவடிக்கைகளைப் புறக்கணிக்க பக்கம் 02

ஒற்றுமை குலைந்தால் பலத்தை இழப்போம்!

எச்சரிக்கின்றார் சுமந்திரன்

– எஸ்.நிதர்ஷன் –

தொண்டமானாறு, ஓகஸ்ட் 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நாங்கள் யாரையும் விலகிப் போகுமாறு கூறவில்லை. விலகிப் போகிறவர்களை நாங்கள் பிடித்து எம்முடன் கட்டி வைக்கவும் முடியாது எனத் தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், இருக்கின்ற ஒற்றுமையில் குளறுபடி நடந்தால் எம்மிடமுள்ள பலம் பாதிப்படையும்என்பதால் அதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். பக்கம் 11

பல தடைகளுக்கு மத்தியில் நேற்று செஞ்சோலை நினைவுத்தூபி திறப்பு

முல்லைத்தீவு, ஓக. 15

கடந்த 2006 ஆம் ஆண்டு 14ஆம் திகதி இலங்கை விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான பக்கம் 02

பட்ஜெட் இம்முறை இல்லை!

2020ஆம்ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை இம்முறை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவை அமைச்சரவைஎடுத்துள்ளதுடன், முதல் 4 மாதங்களுக்கான இடைக்கால கணக்கு அறிக்கையை மட்டும் பக்கம் 11

மலையக மக்களின் ஆதரவு சஜித்துக்கே!

அவரைக் களமிறக்குமாறு வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஓக. 15

சஜித் பிரேமதாஸ என்ற நாமமே மக்கள் மத்தியில் இன்று ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, மக்களால் கோரப்படும் வேட்பாளரைக் களமிறக்கி ஜனாதிபதித் தேர்தலை பக்கம் 11

மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ராணுவம்!

யாழ். வந்த இராணுவத் தளபதி கூறினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 15

பயங்கரவாதச் செயற்பாடுகளிலிருந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்புஎங்களிடம் இருக்கின் பக்கம் 02

பாதுகாப்புப் பணி எங்கள் வேலை அதை கவனிக்க எமக்குத் தெரியும்

சிறிதரன் எம்.பிக்கு இராணுவத் தளபதி பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 15

பாதுகாப்பு வேலைகளைப் பார்ப்பது எங்கள் பணி. அது குறித்து நாங்கள் யாருக்கும் ஏதும் சொல்லவேண்டியதில்லை. எங்கள் வேலையைப் பார்க்க எங்களுக்குத் தெரியும். அது அவர்களுடைய வேலையும் அல்ல. பக்கம் 02

காலைக்கதிர் Kalaikkathir

மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. அந்தப் பொறுப்பின் நிமித்தம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே நல்லூர்க் கந்தன் ஆலயத்திலும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நேற்று யாழ்ப்பாணம் வந்த இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து ஆலய உற்சவ காலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்திருந்தார்.

இதன் பின்னர் ஆலயப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவம் நடைபெறுகின்றமையால் ஆலயத்துக்கு வருகின்றவர்களினதும் ஆலயத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். அந்தப் பொறுப்புளங்களுக்கு இருப்பதால்தான் நாங்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றோம்.

பாதுகாப்பை வழங்கவேண்டிய பொறுப்பு இருப்பதால் அதற்கமைய தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பது மக்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு உதவி செய்வதற்குமானதே. அதை விடுத்து மக்களுக்கு அசௌகரியத்தை அல்லது இடைஞ்சலைக் கொடுப்பதற்காக அல்லஎன்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் துரதிஷ்டவசமாக கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சம்பவத்தால்தான் இப்படியான பாதுகாப்புக்களை அதிகமாக்க வேண்டியுள்ளது. அதற்கமையவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையால் கோவிலுக்கு வருபவர்கள் தமது வேண்டுதல்களை நிறைவேற்றி இடைஞ்சல்கள் ஏற்படாத வகையில் கடவுளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குத்திரும்பிச்செல்லவேண்டும் என்பது தான் எங்களது நோக்கமாகும்.

இங்கு இராணுவம் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை பாதுகாப்பு சம்பந்தமான அச்சுறுத்தல் ஏதும் ஏற்படவில்லை. இந்த மாதம் முடியும்போது அதிகமான சனக் கூட்டம் இங்கு ஒன்று கூடவுள்ளனர். அதனால் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய தேவையும் பொறுப்பும் கடமையும் உள்ளது.

இதனால்தான் தற்போது இராணுவமும் பொலிஸும் விசேட கடமையில் ஈடுபட்டுள்ளன. எந்தவொருவேண்டத்தகாதசம்பவமும் நடக்காமல் உறுதிப்படுத்துவதுதான் எமது நோக்கமும் கடமையுமாகும். குறிப்பாக கடந்த காலத்தில் சில வேண்டத்தகாத சம்பவங்கள் நடந்துள்ளன. அதனால் பாதுகாப்பு சம்பந்தமாகக் கூடுதலான அக்கறை செலுத்தவேண்டியிருக்கின்றது – என்றார். (ஐ–07)

பாதுகாப்புப் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் நாடாளுமன்ற உரைக்குப் பதிலடி கொடுத்தார் இராணுவத் தளபதிலெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க.

நல்லார் ஆலயத்திலிருந்து இராணுவம் வெளியேறவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அண்மையில் நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த இராணுவத் தளபதி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது நல்லூரிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டுமென சிறிதரன் எம்.பி தெரிவித்த கருத்து தொடர்பில் இராணுவத் தளபதியிடம் ஊடகங்கள் வினவின. அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும்தான் பாதுகாப்பு விடயங்கள் சம்பந்தமாகத் தெரியும். பாதுகாப்பு சம்பந்தமாகப் பார்ப்பது அவர்களுடைய வேலை இல்லை. அது எங்கள் வேலை. நாங்கள் பாதுகாப்புக்காகத்தான் இதைச் செய்கிறோம். ஆகையினால் இது குறித்து யாருக்கும் ஏதும் சொல்லவேண்டியதில்லை.

எங்களுக்கு எங்கள் வேலை தெரியும். ஆலயத்துக்கும் ஆலயத்துக்கு வரும் மக்களுக்கும் பாதுகாப்பை வழங்கவேண்டியது எங்களது கடமையும் பொறுப்பும் ஆகும். அதற்கமைய நாங்கள் தேவையான பாதுகாப்பை வழங்கி வருகின்றோம். இதனூடாக எங்களுக்கு கடவுள் ஆசீர்வாதமும் இருக்கிறது. ஆகவே ஆலயத்திற்கு பாதுகாப்பு தேவையில்லை என்று இவர்கள் சொன்னால் எதிர்காலத்தில் இவர்களுக்குதான் கடவுள் ஆசீர்வாதம் இல்லாமல் போகலாம். – என்றார். (ஐ–07)

பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 6.30 மணிக்கு மடு அன்னையின் திருவிழாத் திருப்பலி இடம்பெறும். அதன் பின்னர் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

அன்னையின் திருவிழாவுக்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் மடுத் திருப்பதியில் திரண்டுள்ளனர்.

பக்தர்களுக்குத் தேவையான சுகாதார அடிப்படை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவிழாவையொட்டி ஆலயச் சுற்றாடல் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் அனைவரும் கடும் உடற்பரிசோதனையின்பின்னரேஉள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

பல தடைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் செஞ்சோலை வளாகப் பணியாளர்கள் உள்ளிட்டவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று தமிழர் தாயகப் பகுதி எங்கும் புலம்பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்துக்குச் செல்கின்ற வீதியின் ஆரம்பத்தில் செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட தூபி பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நினைவு தூபி அமைப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தவர்களை புதுக்குடியிருப்புப் பொலிஸார் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டதோடு, அந்த இடத்தில் படங்கள் பதிக்கவோ உயிரிழந்தவர்களின் பெயர்களை எழுதவோ தடை விதித்தனர். நினைவுத் தூபியை மட்டும் கட்டலாம் எனக் கட்டுப்பாடு போட்டனர்.

இந்நிலையில் நேற்று இந்த நினைவுத் தூபி திறந்துவைக்கப்பட்டது

உயிரிழந்தவர்களின் உறவுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவமோகன் உள்ளிட்டவர்கள் இணைந்து நாடாவை வெட்டித் தூபியைத் திறந்து வைத்தனர்.

(விரிவான செய்தி 05ஆம் பக்கத்தில்)

யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கடந்த 13 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டக் கல்வியை நிறைவு செய்த பல மாணவர்களுக்கு இதுவரை பட்டமளிப்பு நடத்தப்படவில்லை. இதற்கு வேந்தர் நியமனம் செய்யப்படாமை காரணமாகச் சொல்லப்படுகிறது. எனவே உடனடியாக வேந்தர் நியமனத்தை விரைவாக நடத்துவதன் மூலம் பட்டமளிப்பு விழாவை நடத்த வேண்டும் என்றும் , மூன்று மாத காலத்துக்கு மேலாக வெளியிடப்படாமலிருக்கும் பரீட்சை முடிவுகளை வெளியிட வேண்டும் என்றும் கோரி இன்று வியாழக்கிழமை தமது கல்வி நடவடிக்கைகளைத் தாங்கள் புறக்கணிக்கவுள்ளனர் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ–07)

ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகள் இந்தக் கட்சிக் கூட்டத்தில் பேசப்படவுள்ளது.

தம்மை ஜனாதிபதி வேட்பாளராக்கி சஜித்தை பிரதமர் வேட்பாளராக நியமிக்கலாமென கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார் ரணில்.

கரு ஜெயசூரியாவின் பெயர் சிபாரிசு செய்யப்பட்ட போதும் இப்போதுள்ள சர்ச்சை நிலைமையில் வேட்பாளராக வருவதற்கு அவர் தயங்குகிறார் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை ரணிலுக்கு நெருக்கமான சிலர் நேற்று முன்தினம் இரவு கூடி சஜித்துக்கு கட்சிக்குள் இருக்கும் ஆதரவு குறித்து ஆராய்ந்துள்ளனர். 29 எம்பிக்கள் சஜித்துக்கு நேரடி ஆதரவை வழங்குகின்றமை இதன்போது தெரியவந்துள்ளது.

இதனால் நாடாளுமன்றக் குழுவும் செயற்குழுவும் ஒரே நேரத்தில் கூடும்போது சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதா என்பது குறித்துப் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தப் பிரதமர் ரணில் தீர்மானித்துள்ளார்.

இரகசிய வாக்கெடுப்பு நடத்தாமல் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தினால் ரணிலால் செயற்குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ரணிலின் நிலைப்பாட்டுக்கே ஆதரவளிப்பார்களென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்புமனுப் பெற ரணிலிடமே செல்ல வேண்டும் என்பதால் பெரும்பாலான எம்.பிக்களும் பகிரங்க வாக்கெடுப்பில் ரணிலுக்கு ஆதரவாகவே இருப்பார்களென அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைப்பிரிவு இருக்கவில்லை.

நம் மத்தியிலே விரல்விட்டு எண்ணக் கூடிய வகையில் ஓரிரு இருதய சிகிச்சைநிபுணர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நீண்டகாலமாகத் திருப்திகரமான சேவையை வழங்கி வருகின்றனர்.

இருதய சிகிச்சை நிபுணர்கள் இருந்த போதும் இருதய சத்திர சிகிச்சைநிபுணர்கள் இங்கு இருக்கவில்லை. இருதய சத்திர சிகிச்சைகளும் இங்கு நடக்கவில்லை.

இங்குள்ள இருதய சிகிச்சை நிபுணர்களின் சிபாரிசில் பெரும்பாலும் கொழும்புக்குச் சென்றே இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயம் யாழ்ப்பாண நோயாளர்களுக்கு இருந்து வந்தது.

இதனால் பெரும் பணச் செலவு, சிரமம், நெருக்கடி என்று வடக்கு இருதய நோயாளிகள் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியும் இருந்தது.

இந்த நிலையில்தான் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் முகுந்தன் மூன்றுவருடங்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார்.

எனினும் இருதய சத்திரசிகிச்சைக்கான அடிப்படை வசதிகள் கூட இங்கு இருக்கவில்லை.

ஆனாலும், யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தி டாக்டர் முகுந்தனோடு சேர்ந்து ஓர் இருதய சத்திரசிகிச்சை கூடத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்தது.

2017 டிசெம்பர் முதல் யாழ்ப்பாணத்திலேயே இருதய சந்திர சிகிச்சை நடைபெறத் தொடங்கியது. அது குறித்து செய்தி ஊடகங்களில் சிலாகித்துச் செய்திகள் பிரசுரமாகின.

இருக்கின்ற வசதியில் வாரத்துக்கு சராசரியாக இரண்டு இருதய சத்திரசிகிச்சைகளே இங்கு செய்யக் கூடியதாக இருந்தன.

அந்த வகையில் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு இங்கு இருதய சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இன்னும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் இருதய சத்திர சிகிச்சைக்கு இங்கு 'வெயிட்டிங் லிஸ்ட்' டில் காத்திருக்கின்றனர்.

ஆனால், கடந்த மாத இறுதியுடன் யாழ்ப்பாணத்தில் இருதய சத்திரசிகிச்சை நின்று போய்விட்டது.

அந்த இருதய சத்திர சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் பதிவு செய்து விட்டுக் காத்திருக்கும் மூத்த பிரமுகர் ஒருவர் எமது அலுவலகத்துக்கு வந்து, அந்தச் சத்திரசிகிச்சை நிறுத்தப்பட்டுவிட்ட அவலத் தகவலை மிகுந்த மனவேதனையோடு முறைப்பாடு செய்தார். அதனையடுத்து விடயத்தை துருவினோம்.

இருதய சத்திரசிகிச்சை நிபுணர் இருக்கின்றார். அதற்கான சத்திர சிகிச்சைக் கூடத்தையும் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் கஷ்டப்பட்டுத் தேடிப்பிடித்து, ஒழுங்குபடுத்தி, ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. ஆனால் சத்திரசிகிச்சை நின்று விட்டது.

காரணம், சத்திரசிகிச்சைக்கு அவசியமான உணர்வழி சிகிச்சை நிபுணர்களின் (மயக்க மருந்து சேவை வழங்கும் வைத்திய நிபுணர்களின்) பற்றாக்குறையே என்று பதில் வந்தது.

ஊடுருவி விசாரித்தால், யாழ். ஆஸ்பத்திரியில் முழு சத்திரசிகிச்சைகளுக்கும் என ஆக நான்கே நான்கு உணர்வழி வைத்திய சிகிச்சைநிபுணர்களே உள்ளனர். தினசரி ஆஸ்பத்திரியில் நடைபெறும் பல டசின் அறுவை சிகிச்சை அனைத்துக்கும் அவர்கள்தான் அந்த மயக்க மருந்து வழங்கும் சிகிச்சையை வழங்க வேண்டியுள்ளனர்.

யானைப் பசிக்கு சோளப் பொறி போல, நான்கு சிகிச்சை நிபுணர்களை மட்டும் வைத்து இரவு பகலாக சகல வித சத்திர சிகிச்சைகளையும் மேற்கொள்வது என்பது அசாத்தியமான சாதனை.

இதற்குள் நீண்ட நேரம் எடுக்கும் இருதய சத்திரசிகிச்சைக்கும் உணர்வழி வைத்திய நிபுணர்களின் சேவை தேவை என்றால் ஆஸ்பத்திரி நிர்வாகம் எங்கு போகும்?

வேறு வழியில்லை. இருதய சத்திர சிகிச்சை சேவை நிறுத்தப்பட்டு விட்டது. யாழ். நோயாளிகளுக்கு இந்த சத்திரசிகிச்சை கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத தாகி விட்டது.

நாட்டின் பிரதமரும், சுகாதார அமைச்சரும் வடக்கில் நிற்கின்றனர். யாராவது சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் பிரதமரின் காதில் இதனைப் போட்டு, யாழ். இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுக்கென இரண்டுஉணர்வழிசிகிச்சை மருத்துவ நிபுணர்களைப் பெற்றுத் தருவதற்கு ஒழுங்கு செய்ய மாட்டார்களா?

அத்தோடுஅப்பிரிவில்சிகிச்சை பெறும்நோயாளிகளுக்கெனதனியான வார்ட்டும் ஒரு ஐ.சி.யூவும் அவசியம். அவற்றையும் பெற்றுத் தந்தால் நமது இருதய சத்திரசிகிச்சை நோயாளர்களுக்குப் புண்ணியம் செய்ததாக அது இருக்கும்.

சம்பந்தப்பட்டோர் காதில் யாராவது இதைப் போடுவார்களா?

- மின்னல் -

போதை ஒழிப்பு செயற்திட்டம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் போதை ஒழிப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தும் விதமாக துண்டுப்பிரசு ரங்கள்விநியோகிக்கப்பட்டுள்ளன.

போதையற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்என்றதவிசாள ரின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த நிகழ்வு நேற்று பச்சி லைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் ஆரம் பமாகியது.

இங்கே சபையின் உறுப்பி னர்கள் மற்றும் உத்தியோகத் தர்கள் மக்கள்மத்தியில்போதை யினால் ஏற்படும் பாதிப்புகள்

சீரழிவுகள் பற்றியும் அதிலி ருந்து விடுபடும் வழி வகைகள் பற்றியும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர்.

இது தொடர்பாக கருத்து தெரி வித்தவிசாளர்போதைபொருள் பயன்பாட்டின் காரணமாக ஏற் படுகின்ற பாதகமான விளைவு களிலிருந்து எனது இளம் சமூ கத்தையும் எமது இனத்தினு டைய பண்பாட்டு விழுமியங்க ளையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அத்துடன் இந்த போதையை எமது பிரதேசத்தி லிருந்து முற்றாகஅழித்தொழிக்க வேண்டும் என்பதே எமது சபை யினுடைய உறுப்பினர்கள் அனைவரதும் திடசங்கற்பம் ஆகும்.

ஆகவே இதற்குரிய செயற் திட்டங்களை எமது சபை ஊடாக முன்னெடுத்து வருகின்றோம். அதன் ஓர் அங்கமாகவே இந்த துண்டுப்பிரசுரங்கள் ஊடாக மக்களை தெளிவு படுத்துகின்ற நடவடிக்கையை ஆரம்பித்துள் ளோம் என்றார்.

நிரந்தரத் தீர்வைப் பெற யாருடனும் பேசத் தயார்

சிறிதரன் எம்.பி கூறுகின்றார்

தமிழர்களுக்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பாக, எந்த தரப்பினருடனும் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது என்று கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில்நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதிதேர்தல்தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் எந்தக் கட்சியுட னும் கலந்துரையாடவில்லை. ஆனால்அவ்வாறுபேசுவதற்கு கட்சிகள் அழைத்தால், தமிழ் மக்களின் நலன் சார்ந்து எந்த கட்சியினர் நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வை முன்வைக்கின் றார்களோ அந்தத்தீர்வுதொடர் பாக அவர்களுடன் பேசுவதற்கு தயாராகவேஉள்ளோம்.யாருடன் இணைந்து பயணிக்கின்றோம் என்பதை ஊகத்தின் மூலம் கூற முடியாது. தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க அனைத்துதரப்பினரு டனும் கலந்துரையாடத் தயாரா கவே உள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல் லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை குழு இசை யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் வயலின் – க.வித்யாசாகர், மிருதங்கம் – ச.அர்பிந்தா.

7.15 முதல் 8.15 வரை இசைக்கச்சேரி – பாட்டு – பங்கயற்செல்வி முகுந்தன், வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் – ஜெ.கானகோகிலம் –தபேலா – ச.ஜெனில் சங்கர்.

கோட்டாபயவையும் சஜித்தையும் மோதவிடும் இணைய முடக்கிகள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நேர டியாக மோதுவார்கள் என எதிர்பார்க்கப் படும் கோட்டாபய ராஜபக்ஷவையும், சஜித் பிரே மதாஸவையும், இணைய மோதலுக் குள் சிக்க வைத்துள்ளனர் இணையத்தள முடக்கிகள்.

சஜித் பிரேமதாசவின் பெயரில் உள்ள, www.sajithpremadasa.com என்ற இணை யத்தளத்துக்குள் நுழைவோர், கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரில் உள்ள, www.gota.lk என்ற இணையத்தளத்துக்கு தானாகவேகொண்டுசெல்லப்படுகிறார்கள்.

அதுபோல, கோட்டாபய ராஜபக்ஷவுக் காகப்பரப்புரைகள்செய்யப்படும்gotabaya-rajapakse.com என்ற இணையத் தளத் துக்குள் நுழைவோர், இலங்கைச் சிறைச் சாலைகள்திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான http://www.prisons.gov.lk இற்குள் கொண்டு செல்லப்படுகின் றனர். இணையத்தள முடக்கிகளில் இந்த சதி வேலை கொழும்பு அரசியல் வட்டாரங் களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், www.sajithpremadasa.com என்ற இணயத்தளம் தங்களால், இயக்கப்படவில்லை என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தளத்துடன் எங்களுக்கு எந்தத்தொடர்பும் இல்லை, என்ன நடந்தது என்பது குறித்துக் கருத்துத் தெரிவிக்க முடியாது. இருப்பினும், நாங்கள் விரை வில் ஒரு புதிய அதிகாரபூர்வ தளத்தை தொடங்கவுள்ளோம். – என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் விவரக்குறிப்பில் இதுதாக்கத்தை ஏற்படுத் துவதால் இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுக்க ஆராயப்பட்டு வரு வதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரில் உள்ள இணையத் தளத்துக் குள் நுழைவோர், சிறைச்சாலைத்திணைக் களத்தின் வலைத்தளத்துக்குள் அனுப்பப் படுவது குறித்து கோட்டாபய ராஜபக்ஷ தரப்பின் கருத்து உடனடியாக வெளியாக வில்லை.

northern PC Park

கணினி உலகில்
நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு
மேலாக யாழ் மண்ணில்

வடக்கின்
கணினிப் பூங்கா
10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள
நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

விமான நிலையங்களைச் சூழவுள்ள 5 கி.மீ. பகுதியில் பட்டம் விடத் தடை

யாழ்ப்பாணம், ஒக்.15

இலங்கையிலுள்ள சர்தேச விமான நிலையங்கள் மற்றும் சிவில் விமான நிலையங்கள் என்பன அமைந்துள்ள பிரதேசத்தைச் சூழவுள்ள 5 கிலோ மீற் றர் பரப்புக்குள் பட்டம் பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இத் தடையை மீறுவது தண்டனைக்குரிய குற்றம் எனவும் விமான நிலைய முகாமையாளர்எச்.எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன்படி, கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமானநிலையம், மத்தள சர்வதேச விமான நிலையம், பாலி, சீகிரிய, கொக்கல போன்ற சிவில் விமானநிலையங்கள் என்பனவற்றுக்கு இந்த சட்டம் அமுலாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக

கல்லாறு கிராமத்திற்கு நிதி ஒதுக்கிய சிறிதரன் எம்.பிக்கு மக்கள் பாராட்டு

கிளிநொச்சி, ஒக.15

தமது பல தேவைகளை நிறை வேற்றிய தமிழ்த்தேசியக்கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனுக்கு தமது நன்றி யைத்தெரிவித்துக்கொண்டார்கள் கிளி நொச்சி கல்லாறு கிராம மக்கள்.

கல்லாறு கிராம மக்களுடனான சந் திப்பு கல்லாறு பொது நோக்கு மண்ட பத்தில் நேற்று இடம்பெற்றது அதன் போதே கலந்து கொண்ட மக்கள்நாடாளுமன்றஉறுப்பினருக்கு நன்றிதெரிவித்தார்கள்அண்மையில் கல்லறு கிராமாத்திற்கு வருகை தந்தபோது கிராம மக்களால் விடுக் கப்பட்ட பிரதான கோரிக்கையாக இருந்த கல்லாறு பிரதான வீதியை கிரவல் மூலமாகவேனும் முதற்கட்ட மாகபுனரமத்துதருமாறுவிடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தற்போது 40 இலட்சம்ரூபாசெலவில்புனரமைப்பு செய்யப்படுகிறது.

அத்துடன் கல்லாறு கிராமத்தின் நாடாளுமன்றஉறுப்பினர்விளையாட்டு மைதானம் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அபிவிருத்திப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் பார் வையிட்டார்.

கிராம அபிவிருத்திசங்கத்தின்தலை மையில் இடம்பெற்றநிகழ்வில்நாடாளு மன்ற உறுப்பினருடன் கரைச்சி பிர தேசசபையின் உறுப்பினர்களான கலைவாணி ஜீவராசா, தமிழரசுக்கட் சியின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் விஜயன், கட்சியின் பிரதேச அமைப்பா ளர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

மைத்திரியின் நம்பாசை

தாம் ஜனாதிபதிப் பதவியை விட்டு இறங்கிப் போவதற்கு முன்னர் ஏதாவது ஓர் அரசியல் குசும்புத்தனம் பண்ணி விட்டுத்தான் போக வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றார் போலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இப் பத்தியில் நாம் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டியமை போல, இதற்காக அடிக்கொரு தடவை ஏதாவது முயற்சி பண்ணிக் கொண்டே இருக்கின்றார்.

தமக்கு இல்லாத அதிகாரத்தைப் பிரயோகித்து நாடாளு மன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடு கின்றார் என அறிவித்தார்.

கடைசியாக உயர்நீதிமன்றம் தலையிட்டு அவரது அந்த நடவடிக்கைக்கு ஒரு குட்டுப் போட்டுத் தடை விதிக்க வேண்டிய தாயிற்று.

தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு வெளியே போய், பதவியில் இருந்த பிரதமரை வீட்டுக்கு அனுப்பினார். நாடாளு மன்றப் பெரும்பான்மையைப் பெறாத ஒருவரை பின் கதவால் பிரதமராக்கியமை மட்டுமல்லாமல், அவருக்கு எதிராக நாடாளு மன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட பின்னரும் அவரைப் பிரதமர் பத வியில் நீடிக்க விட்டு, அந்தச் சட்டவிரோத அரசைத் தொட ர வழி செய்தார்.

அதிலும் உயர் நீதிமன்றம் தலையிட வேண்டியதாயிற்று.

தமது இணக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத் தத்தின் மூலம் தமது பதவிக் காலத்தை ஒரு வருடம் குறைந் தமை மட்டுமல்லாமல், அதைத் தமது சாதனையாகப் புளு கித் திரிந்து விட்டு, கடைசி நேரத்தில் அந்த ஒரு வருடத்தி லும் அதிகாரத்தை அனுபவித்து விடும் ஆசையில் அக் காலத்தில் பதவியில் தொடர்வதற்கான முயற்சியாக உயர்நீதி மன்றின் பரிந்துரையைக் கோரினார்.

அதிலும் கூட, அவருக்கு தலையில் குட்டு வைக்குமாற் போல தனது முடிவை வெளிப்படுத்தியது உயர்நீதிமன்றம்.

அதன் பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடங்கி, அமர்ந்து, அமைந்து போகவில்லை.

தமது ஆட்சிக் காலம் எப்போது ஆரம்பித்து எப்போது முடி கின்றது என்ற விவகாரத்தை உயர்நீதிமன்றத்தின் பரி சீலனைக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் மேலும் சில மாதங்களா வது பதவியில் நீடிக்க முடியாதா என்று நம்பாசைப்பட்டார்.

ஆனால், அந்த முயற்சி சரிவராது என்று சட்டவட்டாரங்கள் தெளிவுபடுத்தியமையுடன், அதிலிருந்து பின் வாங்கி இப் போது புதியதோர் முயற்சியை மீண்டும் தொடங்கியிருக்கின் றார்.

இம்முறை, தாம் பதவியிலிருந்து இறங்க முன்னர் – அடுத்த ஒரிரு மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிவதற்கு முன்னர் – மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதா என்ற முயற்சியில் இறங்கியிருக்கின்றார் மைத்தி யார்.

இது குறித்து உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை யாது என் பதை அறிவதற்கு அவர் முயற்சி எடுத்திருக்கின்றார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி உயர்நீதிமன்றம் இந்த விடயத் தைத் தனது பரிசீலனைக்கு எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

நிலுவையாக இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதாயின் அதற்கான தேர்தல் நடை முறைச் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்விடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே உடன்பாடு இல்லை என்ற கார ணத்தைக் காட்டி, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றாமலும், அதன் மூலம் மாகாண சபைத் தேர்தல் களை இழுத்தடிக்கவும் செய்கின்றது ரணில் தலைமை யிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு.

அந்தத் தேர்தலை நடத்தலாமா என்ற முயற்சியில்தான் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை நாடியிருக்கின்றார் மைத்திரியார்.

ஆனால், இது தொடர்பில் புதியதோர் சட்டம் ஒன்று நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் மட்டுமே தேர்தலை நடத்த முடியும் என்பது உள்ளங்ளை நெல்லிக்கனி.

உயர் நீதிமன்றத்துக்கும் அது தெரியும்; நன்கு புரியும்.

ஆனால், சட்டங்களை யாக்கும் பிரத்தியேக அதிகாரம் நாடாளுமன்றுக்கே உண்டு. அதில் நீதித்துறையோ நிறை வேற்று அதிகார ஜனாதிபதியோ நேரடியாகத் தலையிட முடியாது; தலையிடக் கூடாது. அதுவும் உயர்நிதிமன்றுக்கு நன்கு தெரியும்.

ஆகையினால், மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்கு புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட் டும் உயர்நீதிமன்றம், அதில் தலையிடும் அதிகாரம் உயர்நீதி மன்று உட்பட்ட நீதித்துறைக்கு அடியோடு கிடையாது என்பதை தெரிவித்து இவ்விவகாரத்திலிருந்து தன்னை நாசூக்காக, வெட்டி, விலத்திக் கொள்ளும் என்றே சட்டத்துறை அவதா னிகள் கூறுகின்றனர்.

ஆக, இப்படி மாகாண சபைத் தேர்தல்களைத் தமது இந் தப் பதவிக் காலத்தில் நடத்தி முடிக்க வேண்டும் என்ற ஜனா திபதியின் இந்தக் கடைசி நப்பாசையும் கூட உயர்நீதிமன்றத் தின் பரிந்துரையினால் அடிபட்டுப் போகவே அதிக வாய்ப்பு கள் உள்ளன.

2015 இல் மைத்திரி அலையில் நாம் ஒப்பந்தமின்றி அள்ளுண்டு போனோம்

மீள அத்தவறைச் செய்ய முடியாது என்கிறார் மு.காவின் ஹரீஸ் எம்.பி.

எமது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை விட அமைச்சுப் பதவி பெரிதான ஒரு விடயம் இல்லை.

கடந்த 2015 ஆம் ஆண்டு மக்கள் மைத் திரி அலையில் அள்ளுண்டு போனமையால் அரசியல் தலைமைகளுக்கு இந்த அரசை அமைக்க எந்தவித ஒப்பந்தங்களும் இல்லா மல் ஆதரவு வழங்கும் நிலை ஏற்பட்டது. அது போன்று இம்முறை செய்ய முடியாது.

– இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் இரா ஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச கட்சி முக்கியஸ் தர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாசித் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ் வில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு :–

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி களைக் கொண்டு திட்டமிடப்பட்ட அபிவிருத்தி திட்டங்களைச் செய்து முடிக்க வேண்டும்.

கடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பெரிய இரு இனங்களான சிங்கள, தமிழ் மக்களின் மனோநிலை வேறுவிதமாக இருக்கிறது. நெருக் கடியான இக்கால கட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சி அவசரப்பட்டு எந்தத் தீர் மானத்தையும் எடுக்க முடியாது. கடந்த காலங் களை விட இந்தத் தேர்தல் கடினமாக இருக் கும் என்பதால் அலசி ஆராய்ந்து பார்த்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவோம்.

பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட் பாளர்களை அடையாளப்படுத்த இப்போது தான் ஆரம்பித்துள்ளன.

நாங்கள் தொடர்ந்தும் அச்சத்துடன் வாழ முடியாது. இதனை அண்மையில் தெஹி வளைப் பள்ளிவாசலில் நடைபெற்ற மாநாட் டில் தெளிவாகக் கூறியுள்ளோம். எங்களு டைய திருமண சட்டம், காதி நீதிமன்ற விவகாரம் உட்பட பிரதேச ரீதியாகப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். அதை செய்யாமல் அமைச்சர் பத வியைப் பெற்றுக் கொள்ள முடியாது. எங்களின் கூட்டு இராஜினாமா மூலம் சர்வதேச அழுத் தங்கள் இந்த நாட்டுக்குப் பரவலாக வரத் தொடங்கியுள்ளன. எங்களின் ஒற்றுமையான பயணத்தின் மூலம் நாங்கள் எமது நாட்டில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த முடிந்தது.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் அதிகமான பிரச்சினைகள் தேங்கி இருக்கின்றன. தோப்பூர் மக்களுக் கான பிரதேச செயலக உருவாக்கத்தை இலக் காக கொண்டு முன்வைக்கப்பட்ட அமைச்சர வைப் பத்திரத்தைக் கூட தமிழ்த் தேசியக் கூட் டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும் ஏனைய சில தமிழ் எம்.பிக்களும் தலையிட்டுத் தடுத்து விட்டார்கள். ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை யில் எமது மக்களின் காணிப் பிரச்சினையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அநீதி யாக நடந்து கொள்கிறது.

நேற்றையதினம் களுவாஞ்சி குடியில் நடந்த கூட்டம் ஒன்றில் பொய் யான பல தகவல்களை இனவாதமா கத் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரன் பேசியுள்ளார். கல்முனை என் பது 100 வருடங்களுக்கு முன்னரே இருந்து முஸ்லிம் அமைச்சர்கள், தலைவர்களால் வடிவமைக்கப்பட்ட நகரம். தமிழ்ப் புலிகளின் உதவியுடன் உருவாக்கப்பட்ட உப செயலகத்தை அவர்கள் நினைத்தால் போல தரமு யர்த்தவும் அவர்கள் கொண்டுவரும் திட்டங்கள் வெற்றிபெறவும் நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவ தில்லை. பொய்யான பல தகவல் களை ஊடகங்களிடமும், மக்களிடமும் தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரப்பி வருகிறார்கள். அவர்களின் கருத்துக்க ளால் முஸ்லிம் புத்திஜீவிகளும் கூட சில நேரங்களில் குழம்பிப் போகிறார்கள்.

கல்முனையில் யாருக்கும் எந்தவித விட்டுக் கொடுப்புக்களோ அல்லது அநியாயங்களோ நாங்கள் செய்யப்போவதில்லை. இவர்களின் பொய்யான பரப்புரைகளை நாங்கள் நம்பத் தேவையும் இல்லை. கல்முனை விவகாரம் பற்றிய முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக என்

னிடம் யார் எப்போது வினவினாலும் பதிலளிக் கத் தயாராகவே இருக்கிறேன்.

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை மதி யாமல் வடக்கையும் கிழக்கையும் இணைத்த வர்கள் மீண்டும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கத் தமது கோரிக்கைகளை புதிய வேட்பாளர்களிடம் முன்வைக்கத் தயாராகி வரு கிறார்கள். முஸ்லிம்தரப்பில் நாங்கள் முன்வைக் கப்போகும் முதல் கோரிக்கை வடக்கையும் கிழக்கையும் ஒருபோதும் இணைக்க கூடாது என்பதாகும். இந்த நல்லாட்சி அரசாங் கத்தி னருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீது இரக்கமும், பாசமும் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது.

நான் என் மக்களின் உரிமைக்காகப் போரா டும் சண்டைக்காரனாக இருந்து போராடி என் னால் முடிந்த சகல விடயங்களையும் சாதிக்க முயற்சி செய்து வருகிறேன்.

சில நேரங்களில் உரிமை விடயங்களில் எனது சத்தம் உயர்ந்து வந்தால் நான் மஹிந்த அணிக்குத் தாவப் போகிறேன் என வதந்தி களைப் பரப்பி விடுகிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு எப்போதும் கட்டுப்பட்டு நடப்பவன் நான். சரியா, பிழையா என்பதை ஆராய முன் னர் எமது கட்சியின் தீர்மானத்தை மதிப்பவன் நான்.

தயவு தாட்சண்யம் பார்த்து எமது உரிமை களை விட்டுக்கொடுக்க முடியாது. அந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும். –என அங்கு மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் பொத்து வில் பிரதேச சபை முன்னாள் மற்றும் இந்நாள் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாளை 16.08.2019 வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப. 11.38 வரை இராகுகாலம் : 10.35 – 12.05
திதி : பிரதமை மு.இ. 7.59 வரை சுப நேரம் : 6.05 – 7.35

53 மாணவிகளை பலி கொண்ட

செஞ்சோலை நினைவுத் தூபி நேற்றுத் திறப்பு

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி செஞ்சோலை வளாகம் மீது சிறிலங்கா விமானப்படை கிபிர் விமானங்கள் நடத்திய கொடூரமான தாக்குதலில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவிகள் 53 பேரின் 13 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுக் காலை வள்ளி புனம் இடைக்கட்டு சந்தியில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இரண்டு பிள்ளைகளை பறிகொடுத்த தந்தையார் பொதுச் சுடரை ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து பொது திருவுருவப்படத்திற்கு இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பொதுச் சுடர் ஏற்றி வைக்க வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிர காசம் சிவமோகன் மலர்மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகளுக்கான சுடர்கள் அவர்களுடைய உறவுகளால் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து இந்த மாணவர்களுடைய ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நினைவு தூபி திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது

வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள், பெற்றோர்கள் பொது மக்கள் இன உணர்வாளர்கள் அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கோட்டாபய போட்டியிட முடியாமல் போனால் அந்த இடத்துக்கு ஷிராந்தி வேட்பாளராவாரா?

கொழும்பு வட்டாரங்களில் இப்படியும் ஊகம்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில், ராஜபக்ஷ குடும்பத்தினருக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை குறித்துப் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது, ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். நாட்டின் அதிகாரம் முழுவதும் அவர்களின் கைகளிலேயே இருந்தது.

இது, 2015இல் அவர்களின் தோல்விக்கான முக்கியமான காரணமாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

2015 தோல்விக்குப் பின்னர், தாங்கள் கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளனர் என ராஜபக்ஷவினர் கூறிவந்தனர்.

கடந்த சனிக்கிழமை நாமல் ராஜபக்ஷவும்கூட ஒரு நிகழ்வில் உரையாற்றியபோது, அதனைக் கூறியிருந்தார்.

எனினும், கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய மாநாட்டில் ராஜபக்ஷ குடும்பத்தினரே, முன்வரிசையை ஆக்கிரமித்திருந்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ, அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்குப் பின்னர், மஹிந்தவின் புதல்வர்களான நாமல் ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் பலரும் அமர்ந்திருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிவேட்பாளராக நிறுத்தியுள்ளமை மஹிந்த ராஜபக்ஷ, தாம் அடுத்த நாடாளுமன்றத்தேர்தலில்பிரதமர் பதவிக்காக போட்டியிடுவார் என்றும், தானும் கோட்டாபய ராஜபக்ஷவும்இணைந்துஆட்சியை நடத்துவார்கள் என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி வலுப்பெறும் என்பதை ஞாயிறன்று நடைபெற்றமாநாட்டில்இருந்துஉணரமுடிந்துள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது மனைவி ஷிரந்திராஜபக்ஷவும்மாநாட்டில் பங்கேற்றமையும்கேள்விகளை எழுப்பியுள்ளது.

கோட்டாபயராஜபக்ஷ போட்டியிடமுடியாது போனால், மாற்று வேட்பாளராக அவரைக்களமிறக்கும் உத்தியான முன்னேற்பாடாகவும் இது இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

முன்னதாக, கோட்டாபயராஜபக்ஷவுக்குப் பதிலாக சமல்ராஜபக்ஷவையே, களமிறக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இடதுசாரி பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியிருந்தன.

எனினும், அதனை மஹிந்த ராஜபக்ஷ செவிமடுக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவையே களமிறக்கியுள்ளார். அத்துடன் தனது மனைவிக்கும் இந்த மாநாட்டில் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகப் பார்க்கப் படுகின்றது.

அதேவேளை, சமல் ராஜபக்ஷவின் அரசியல் வாரிசும் ஊவா மாகாண முன்னாள்முதலமைச்சருமான சசீந்திர ராஜபக்ஷ ஞாயிறன்று நடைபெற்ற மாநாட்டில் நான்காவது வரிசையில் – ஒதுக்குப் புறமாகவே – அமர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செஞ்சோலை வளாகத்தில் நேற்றுக் காலை 7.05 மணிக்கு சுடர் ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி

முல்லைத்தீவு ஒக.15

சிறிலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி காலை 07.05 மணியளவில் செஞ்சோலை வளாகத்தில் நடத்திய மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலில் அங்கு இருந்த பாடசாலை மாணவர்கள் பணியாளர்கள் உட்பட பலர் அந்த இடத்திலேயே பலியாகி இருந்தனர்

தமிழின அழிப்பின் ஓர் அங்கமாக கட்டவிழ்த்து விடப்பட்ட மற்றுமொரு மிகப்பாரிய படுகொலை யாக இந்தப் படுகொலை வரலாற்றில் தடம் பதித்து ள்ளது.

அந்த வகையிலே இந்த உயிரிழந்த உறவுகளின் பதின்மூன்றாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதி எங்கும் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

தாக்குதல் இடம்பெற்ற காலை 07.05 மணிக்கு செஞ்சோலை வளாகத்தில் கொல்லப் பட்ட உறவுகளுக்கு அஞ்சலி நிகழ்வானது நேற்று அதே இடத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் உறுப்பினர் சி குகனேசன் தலைமையில் இடம்பெற்றது

உணர்வுபூர்வமாக இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் தமது பிள்ளைகளை உறவுகளை பறிகொடுத்தவர்கள் பொதுமக்கள் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆண்டி ஐயா புவனேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்

காலைக்கதிர் Kalaikathir

ஜம்மு – காஷ்மீரில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கும்படி உத்தரவிட மறுத்து விட்டது உச்சநீதிமன்றம்

ஜம்மு – காஷ்மீரில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கும்படி இடைக்கால உத்தரவு எதுவும் பிறப்பிக்க முடியாது என இந்திய உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவின்கீழ், ஜம்மு –காஷ்மீருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை இந்திய மத்திய அரசு அண்மையில் நீக்கியது. மாநிலமாக இருந்த ஜம்மு–காஷ்மீரை லடாக், ஜம்மு –காஷ்மீர் என இரு யூனியன் பிரதேசங்களாகவும் மத்திய அரசு பிரித்தது. இதைத் தொடர்ந்து, காஷ்மீர் பள்ளத்தாக்கு உள்ளிட்ட பகுதிகளில் அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் இருக்கக் கடும் கட்டுப்பாடுகளையும், தடைகளையும் மத்திய அரசு விதித்தது.

வழக்கமான தொழுகைக் காகக் கடந்த வெள்ளிக்கிழமையும், பக்ரீத்பண்டிகைதொழுகைக்காகக் கடந்த திங்கள் கிழமையும் கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்பட்டன.

இந்நிலையில், ஜம்மு–காஷ்மீரில் மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும், தடைகளையும் நீக்கக் கோரியும், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர்கள் மெஹபூபா முஃப்தி, ஒமர் அப்துல்லா ஆகியோரை உடனடியாக விடுவிக்கக் கோரியும், தொலைபேசி மற்றும் இணையதள சேவைகளின் முடக்கத்தை நீக்கக் கோரியும் காங்கிரஸ் ஆதரவாளர் தெஹீன் பூனாவாலா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை, உச்சநீதிமன்ற நீதிபதிகள் அருண் மிஸ்ரா, எம்.ஆர். ஷா, அஜய் ரஸ்தோகி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது நீதிபதிகள், ஜம்மு–காஷ்மீரில் இயல்புநிலை திரும்ப மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினர். இதற்கு, மத்திய அரசு சார்பில் ஆஜரான சட்டமா அதிபர் கே.கே. வேணுகோபால் பதிலளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

ஜம்மு – காஷ்மீரில் சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டுவது அவசியமாகும். தினசரி அடிப்படையில் ஜம்மு–காஷ்மீரின் நிலைமையைக் கண்காணித்து வருகிறோம். மாவட்ட ஆட்சியர்கள் அளிக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் அங்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வருகிறோம்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பயங்கரவாதி புர்ஹான் வானியை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர். அதன் பிறகு, ஜம்மு–காஷ்மீரில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. அதில் 47 பேர் உயிரிழந்தனர். அந்தச் சூழலில், இயல்புநிலைக்குக் கொண்டுவரவே 3 மாதகாலம் தேவைப்பட்டது. எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் தவறான வழிநடத்துதல்கள் காரணமாக, 1990ஆம் ஆண்டு முதல் 44,000 பேர் ஜம்மு–காஷ்மீரில் உயிரிழந்துள்ளனர்.

தற்போது ஜம்மு – காஷ்மீரில் மிகவும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அங்கு இயல்புநிலை திரும்ப இன்னும் சில நாள்கள் ஆகும். கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதிலிருந்து, மக்கள் யாரும் உயிரிழக்கவில்லை. – என்றார் கே.கே. வேணுகோபால்.

இதைத் தொடர்ந்து, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் மேனகா குருசுவாமி வாதிடுகையில், மக்களுக்கான சேவைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. பண்டிகை காலத்தில்கூட மக்களால் மற்றவர்களுடன் பேசமுடியாத சூழல் ஏற்பட்டது. – என்றார்.

இதையடுத்து நீதியரசர்கள் கூறியவை வருமாறு:–

ஜம்மு– காஷ்மீரில் தற்போது நிலவி வரும் பிரச்சினை, மிகவும் உணர்வுபூர்வமானது. அதற்கு ஒரே நாளில் தீர்வு கண்டுவிட முடியாது. அங்கு இயல்புநிலை திரும்ப, மத்திய அரசுக்கு சிறிது காலஅவகாசம் தரப்பட வேண்டியது அவசியம். தினசரி அடிப்படையில் அவர்கள் நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். அங்குள்ள மக்களின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது.

அங்கு பிரச்சினைகள் ஏதேனும் நிகழ்ந்து விட்டால், யார் பொறுப்பேற்பது? அச்சூழலில், மத்திய அரசுதான் பதில்கூறும் நிலைக்குத் தள்ளப்படும். தற்போதைய நிலையில், இந்த மனு மீது எந்தவித இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க நாங்கள் விரும்பவில்லை.

மக்களுக்குரிய சுதந்திரம் கிடைக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். ஆனால், அங்கு இயல்புநிலையும் திரும்ப வேண்டும். இரு வாரங்கள் கழித்து இந்த மனுவை விசாரிக்கிறோம்.– என்று நீதிபதிகள் தெரிவித்தனர். (உ)

ஓடுபாதையில் நாய்கள் கூட்டம் நின்றதால் தரை இறக்க முடியாமல் போன விமானம்!

கோவாவில் இப்படியும் சிக்கல்

பனாஜி, ஓக.15

கோவாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் ஓடு பாதையில் கூட்டமாக நாய்கள் நின்றமையால் ஒரு விமானத்தை கடைசி நிமிடத்தில் தரை இறக்க முடியாமல் போயிற்று என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கோவாவின் டபோலிம் நகரத்தில் அமைந்துள்ளது சர்வதேச டபோலிம் விமான நிலையம். கோவாவில் உள்ள ஒரே விமான நிலையம் இதுதான். இந்த நிலையத்தை பொதுமக்களை ஏற்றிச் செல்லும் விமானங்களும், இந்திய இராணுவத்தின் வான்படை விமானங்களும் பயன்படுத்துகின்றன. எனவே, இது வான்படையினரின் வானூர்தித் தளமாகவும் செயல்படுகிறது.

இந்த விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணி அளவில் மும்பையில் இருந்து ஏர் இந்தியா பயணிகள் விமானம் வந்து கொண்டிருந்தது. தரை இறக்க ஓடுதளத்தை நெருங்கிய வேளையில், கடைசி நிமிடத்தில் விமானம் தரை இறக்கப்படவில்லை. ஏனென்றால், அங்கு பல நாய்கள் திரிந்து கொண்டு இருந்துள்ளன.

அதிகாலை என்பதால் நாய்களின் நடமாட்டம் ஓடுதளத்தில் இருப்பதை விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு ஊழியர்களால் கண்டறிய முடியவில்லை. இதனால் விமானம் கோவாவில் தரை இறக்கப்படவில்லை.

இது குறித்து அதிகாரிகள் அளித்த விளக்கத்தில், ' நாய்கள், பறவைகள் ஓடுதளத்தில் இருக்கின்றமையைத் தடுக்க ஐ.என்.எஸ் ஹன்சா முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக அதிகாலை வேளையில் அதிக ஆள்களைப் பணியமர்த்தும். ஏற்கனவே, ஓடுபாதையின் அருகிலிருந்து 200 நாய்களை இடமாற்றம் செய்ய மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது' என கூறியுள்ளனர்.

எல்லையில் குவிக்கப்படும் பாக். படைகளுக்கு பதிலடி கொடுக்க இந்திய ராணுவம் தயாராம்!

இராணுவத் தலைமை தளபதி விபின் ராவத் தெரிவிப்பு

புதுடில்லி, ஓக.15

ஜம்மு–காஷ்மீரையொட்டி எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் உள்ள பகுதிகளில் பாகிஸ்தான் கூடுதலாக படைகளைக் குவித்து வருவது கவலைக்குரிய விஷயம் அல்ல என்று இந்திய இராணுவத் தலைமை தளபதி விபின் ராவத் கூறியுள்ளார்.

ஜம்மு–காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை அளித்த அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவை மத்திய அரசு அண்மையில் நீக்கியது. இதையடுத்து, பாகிஸ்தான் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அதற்கு பதிலடி கொடுப்பதற்காக எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையொட்டி இந்திய இராணுவம் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

அதேபோல், மத்திய அரசின் நடவடிக்கையைத் தொடர்ந்து மக்களிடையே ஏதாவது கொந்தளிப்பு ஏற்பட்டால் அதை அடக்குவதற்காக ஜம்மு–காஷ்மீரில் உள்ள இராணுவ உயரதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பதற்றத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சி செய்யக் கூடும் என்றும், இதனால் அங்கு சக்திவாய்ந்த குண்டு வெடிப்புகள், தற்கொலைப்படைத் தாக்குதல்கள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கலாம் என்றும் அரசு வட்டாரங்கள் கருதுகின்றன. எல்லைப் பகுதியை நோக்கி பாகிஸ்தான் இராணுவம் பீரங்கிகளை அனுப்பி வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், டில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ராணுவத் தளபதி விபின் ராவத் கலந்து கொண்டார்.

அப்போது அவரிடம் ஜம்மு–காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு நீக்கியதைத் தொடர்ந்து எல்லையில் பாகிஸ்தான் துருப்புகளை அதிகரித்துள்ளதாக வந்த தகவல் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்து ராவத் கூறியவை வருமாறு :–

அது இயல்பானதுதான். ஒவ்வொரு நாடும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக படைகளைக் குவிப்பதோடு, தளவாடங்களையும் எல்லைப் பகுதிக்கு நகர்த்துவது வழக்கம். அது பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

எல்லைப் பகுதியில் எந்த பாதுகாப்புச் சவாலையும் சமாளிக்க இந்தியப் படைகள் தயாராக உள்ளன.

இனி வரும் நாள்களில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் தாக்குதல்கள் அதிகரிக்குமா என்று கேட்கிறீர்கள். அதை முடிவு செய்ய வேண்டியது பாகிஸ்தான் மட்டுமே. – என்று ராவத் தெரிவித்தார்.

சீனாவைப் புரட்டிப் போட்ட புயலில் 50 பேர் பலி: 21 பேரைக் காணோம்

பீஜிங், ஓக.15

சீனாவைப் புரட்டிப் போட்ட, 'லெக்கிமா' சூறாவளி மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவில், பலியானோர் எண்ணிக்கை, ஐம்பது ஆக அதிகரித்துள்ளது; 21 பேரை காணவில்லை.

சீனாவின் ஜேஜியாங் மாகாணத்தை, கடந்த வாரம், கடும் சூறாவளி தாக்கியது. லெக்கிமா என, பெயரிடப்பட்ட இந்த சூறாவளியால், பலத்த மழையும், வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டன. ஜேஜியாங் மாகாணத்தை அடியோடு புரட்டிப் போட்ட இந்த சூறாவளி, சாண்டோங், அன்ஹுய் ஆகிய மாகாணங்களையும் அடுத்தடுத்துத் தாக்கியது. ஜேஜியாங் மாகாணத்தில் மட்டும், நேற்று முன்தினம் மாலை வரை, 39 பேர் பலியாகி உள்ளனர்.

மற்ற மாகாணங்களில், 11பேர் பலியாகினர். இந்தச் சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, 21 பேரை காணவில்லை. பலத்த மழையைதொடர்ந்து, பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. பல லட்சம் பேர், பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்; 2.34 லட்சம் ஹெக்டேர் மதிப்பிலான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று மாகாணங்களிலும் வரலாறு காணாத மழை பெய்துள்ளதால், பெரும்பாலான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. ரயில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடக்கின்றன.



கொடிய நோயான 'எபோலா'வுக்கு மருந்து கண்டுபிடித்துச் சாதனை!

கொங்கோ, ஓக.15

கொடிய நோயான 'எபோலா'விற்கு மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மருந்து கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர்.

ஆபிரிக்காவின் கொங்கோ ஜனநாயக குடியரசில் 'எபோலா' பரவியதை தொடர்ந்து 1,800 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் 'எபோலா' நோய்க்கு எதிரான போராட்டத்தில், ஒரு வளர்ச்சியாக, இரண்டு பரிசோதனை சிகிச்சைகள் சிறப்பாக செயல்பட்டுள்ளன. அவை இப்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசில் 'எபோலா'வால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

REGN- EB 3 மற்றும் mAb114 என பெயரிடப்பட்ட மருந்துகள், 'எபோலா' வைரஸ் வளர்ச்சியைத் தடுத்து, மனித உயிரணுக்களில் அதன் தாக்கத்தை நடுநிலையாக்குகின்றன. இந்த இரண்டு மருந்துகளின் சோதனை முடிவுகள் கணிசமான விகிதங்களைக் காட்டிய பின்னர்,

'எபோலா' விரைவில் தடுக்கக்கூடிய மற்றும் சிகிச்சையளிக்கக்கூடிய நோயாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சோதனைக்கு நிதியுதவி அளித்த அமெரிக்க தேசிய ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்கள் அமைப்பு, 'எபோலா' விற்கு எதிரான போராட்டத்தில் இது மிகவும் நல்ல செய்தி என அறிவித்துள்ளது.

ZMapp மற்றும் Remdesivir எனப்படும் மற்ற இரண்டு சிகிச்சைகள் சோதனைகளில் குறைவான செயல்திறன் கொண்டவை என்று கண்டறியப்பட்டதால் அவை விலக்கப்பட்டுள்ளன.

தன் படைகளை ஹொங்கொங்கிற்குள் இறக்கி அதை முழுமையாகக் கைப்பற்ற சீனா திட்டம்?

முன்னேற்பாடாகப் படைக் குவிப்பு என்கிறார் அதிபர் டிரம்ப்



ஹொங்கொங் மக்களுக்கு எதிராக சீனா படைகளைக் குவித்து வருகிறது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிராக ஹொங்கொங் மக்கள் தற்போது போராடி வருகிறார்கள். முக்கியமாக சீனாவுடன் இணையும் போது ஹொங்கொங் தன்னாட்சி அதிகாரத்துடன் இருக்கும் என்று ஒப்பந்தம் போடப்பட்டது.

இதை நீக்க கடந்த சில வருடங்களாக சீனா முயன்று வருகிறது. இதற்கு வசதியாக ஹொங்கொங் மக்களை நாடுகடத்த உரிமை அளிக்கும் வகையில் சட்டம் இயற்றவும் சீனா முயன்று வருகிறது.

இந்தச் சட்டத்திற்கு எதிராக கடந்த ஜூன் மாதத்தில் ஹொங்கொங் மக்கள் கடுமையாகப் போராடி வருகிறார்கள். மிக முக்கியமாக ஹொங்கொங்கில் சென்ட்ரல் விமான நிலையத்தில் பெரிய போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில்தான் ஹொங்கொங் மக்களுக்கு எதிராக சீனா படைகளைக் குவித்து வருகிறது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். அதன்படி ஹொங்கொங் எல்லையில் சீனா படைகளை இறக்கி வருகிறது. எப்போது வேண்டுமானாலும் ஹொங்கொங்கை சீனா மொத்தமாகக் கைப்பற்ற வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது.



மீண்டு வரமுடியாத பெரும்குழியில் ஹொங்கொங்கை தள்ளிவிடாதீர்!

போராட்டக்காரர்களிடம் நிர்வாகி கோரிக்கை

ஹொங்கொங், ஓக.15

ஹொங்கொங்கில் கைதிகள் பரிமாற்ற சட்டத்திருத்த பிரேரணைக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்து வருகிறது. பத்தாவது வாரத்தை எட்டியுள்ள இந்த போராட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பயங்கர வன்முறை வெடித்தது

ஹொங்கொங் சர்வதேச விமான நிலையத்தில் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமையால் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் விமான நிலையத்தை முற்றுகையிட்டனர். இதனால் விமானப் பயணங்கள் ரத்து செய்யப்பட்டு விமான நிலையம் மூடப்பட்டது.

இந்த நிலையில், போராட்டம் மூலமாக ஹொங்கொங் மீண்டுவரமுடியாத படுகுழியில் தள்ளப்பட்டு விடும் என அதன் நிர்வாகத் தலைவர் கேரி லாம் போராட்டக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். போராட்டம் தொடர்பாக நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது மிகவும் உணர்ச்சிப்பெருக்குடன் இதனை அவர் கூறினார்.

இது குறித்து அவர் பேசுகையில் –

ஹொங்கொங் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளது. ஒரு நிமிடம் நமது நகரம், குடும்பம் எப்படி இருக்கிறது என்று சிந்தியுங்கள். உங்கள் போராட்டம் மூலம் இந்த நகரத்தை மீண்டு வரமுடியாத படுகுழியில் தள்ளிவிடாதீர்கள். இந்த நகரத்தை படுகுழியில் தள்ளத் தான் நீங்கள் விரும்புகிறீர்களா? ஹொங்கொங்கை பாதுகாப்பாகவும், சட்டம் மற்றும் ஒழுங்குடன் அமைதியாகவும் வழிநடத்துவதே எனது பணியாகும் என்றார். அதே சமயம், போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையான கைதிகள் பரிமாற்றப் பிரேரணையை முழுவதுமாகவாபஸ்பெறுவதற்கான தன்னாட்சி உங்களிடம் இருக்கிறதா? என நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு கேரி லாம் பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

காலைக்கதிர் Kalaikathir

ஜனாதிபதி தேர்தல்களம்:

ஐ.தே.க. வேட்பாளர் தெரிவில் தொடரும் இழுபறியான நிலை!

இலங்கையில் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில்ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாசவை நியமிக்க வேண்டுமென கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பலரும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

மாத்தறை, அம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல பிரதேசங்களில் கட்சி உறுப்பினர்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவா கச் செயற்பட்டு வருகின்றனர். சஜித் பிரேமதா சாவை ஜனாதிபதியாக்குவதே தமது நோக்கமென அமைச்சர் ஹரின் பொர்னாண்டோ கூறியுள்ளார். பதுளைப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை சஜித் பிரேமதாசவுக்கு மாபெரும் வரவேற்பு நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

சஜித் பிரேமதாச ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டுமென கையெழுத்துப் போராட்டங்களும் ஆரம்பிக்கப்படுமென கட்சியின் பதுளைத் தொகுதி அமைப்பாளர் கூறியுள்ளார்.

சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வருகின்றனர்.

சஜித் பிரேமதாசவே ஜனாதிபதி வேட்பாளரென அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பில் செய்தியாளர்களிடம் ஏற்கனவே கூறியுள்ளார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழு விரைவில் முடிவெடுக்குமென கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாய கராகவுள்ள கட்சியின் மூத்த உறுப்பினர் கரு ஜயசூரியவே ஜனாதிபதி வேட்பாளரென ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே கூறியிருந்தார். ஆனால் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான உறுப்பினர்கள் அதனை ஏற்கவில்லை. பகிரங்கமாகவே எதிர்க்க ஆரம்பித்தனர்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் தனக்கு ஆதரவான உறுப்பினர்களோடு சஜித் பிரேமதாச வெளியே வந்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைத்துப் பொது வேட்பாளராக சஜித் பிரேமதாசவை அறிவிக்க விருப்பம் கொண்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே சஜித் பிரேமதாசவுடன் பேசியிருந்தார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளினால் சஜித் பிரேமதாசவுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராக வருமாறு சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டுமெனக் கோரி ஸ்ரீலங்கா பொது ஜனப் பெரமுன கட்சி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. இதனால் சஜித் பிரேமதாசவை பொது வேட்பாளராக நியமிக்கும் முயற்சியில் மைத்திரிபால சிறிசேன தீவிரமாகச் செயற்படுகின்றார் எனக் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க விருப்பமில்லாத குமார் வெல்கம போன்ற உறுப்பினர்கள் பலர் ஸ்ரீலங்கா பொது ஜனப் பெரமுனக் கட்சியில் உள்ளனர். அவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவோடு பேசியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

ஆனாலும் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தால் அதனை மைத்திரிபால சிறிசேன ஆதரிப்பாரா இல்லையா என்பது குறித்து முடிவுகள் இல்லை.

எனினும்ஐக்கியதேசியக்கட்சிதன்னை வேட்பாளராக அறிவித்தால் அதனை ஏற்று ஆதரவு வழங்க வேண்டுமென சஜித் பிரேமதாச மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுள்ளாரென்றும் மற்றுமொரு உயர்மட்டத் தகவல் கூறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய புதிய அரசியல் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைய முடியும் எனவும் சஜித் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சஜித் பிரேமதாச வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் அமெரிக்காவின் ஆதரவைப் பெற முடியுமென அமைச்சர் மங்கள சமரவீரநம்பிக்கைவெளியிட்டுள்ளார். இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோடும் சென்ற ஞாயிற்றுக்கிழமை மங்கள சமரவீர பேசியுள்ளார். மைத்திரிபால சிறிசேனவுடனும் மங்கள சமரவீர இது பற்றி உரையாடியுமுள்ளார் எனக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்த வேண்டுமெனக் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னதாகவே கொழும்பில்உள்ள அமெரிக்கத்தூதரகம் முயற்சி எடுத்திருந்தது. ஆனால் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் எந்தவொரு சந்திப்பையும் இதுவரை நடத்தவில்லை.எனினும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உள்ளக எதிர்ப்புகள் கடுமையாக நிலவியமையால் கரு ஜயசூரியவை வேட்பாளராக நிறுத்தும் விடயத்தில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமெரிக்கத் தூதுவர் பேசியி ருந்தார்.

இன்றைய சூழலில் அமெரிக்காவின் அரசியல் காய்நகர்த்தல்

கண்டி பௌத்த மகாநாயக்கத் தேரர்களின் அரசியல் செல்வாக்கு இலங்கையில் அதிகளவு உள்ளமையை உணர்ந்து கொண்ட அமெரிக்கா, பௌத்த தேரர்களின் விருப்பத்திற்குரிய ஒருவரை வேட்பாளராக நிறுத்தும் முயற்சியில் தீவிரமாகவே ஈடுபட்டு வருகின்றது.

அதனடிப்படையிலேயே கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கரு ஜயசூரியவை ரணில் விக்கிரமசிங்க தன்னிச்சையாக ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருந்தார். இதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எதிர்ப்புகளும் ஏற்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அழுத்தங்களினால் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அது குறித்தும் பரிசீலிக்க அமெரிக்கத் தூதரகம் தயாராகியுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு வேண்டப்பட்டவர் என்ற அடிப்படையில், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கடந்த சில நாள்களாக அமைச்சர் மங்கள சமரவீரவுடன்தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் நீடிக்குமானால் சில சமயங்களில் ரணில் விக்கிரமசிங்கவையே வேட்பாளராக அறிவிக்கும் நிலையும் ஏற்படலாம். இது குறித்தும் மங்கள சமரவீர சஜித் பிரேமதாசவுடன் பேசியுள்ளார் என உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மைத்திரி – ரணில் அரசாங்கத்தை அமெரிக்காவின் ஆதரவுடன் அமைப்பதில் அமைச்சர் மங்கள சமரவீர தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, முல்லைத்தீவுக் கடற்பகுதி உள்ளிட்ட கிழக்குக் கடற்பிரதேசங்களையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் கையகப்படுத்தும் நோக்கில் சோபா எனப்படும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு அமெரிக்கா கடந்த சில வருடங்களாக முயற்சி எடுத்து வருகின்றது.

இந்தோ – பசுபிக் பிராந்திய நலன் உள்ளிட்ட பூகோள அரசியல் தேவைக்காக இலங்கைத் தீவில் நிரந்தரமாகவே காலூன்றத் துடிக்கும் அமெரிக்கா தற்போது வடக்கு-கிழக்குக் கடற் பிரதேசங்களை மையமாகக் கொண்டே சிங்கள ஆட்சியாளர்களுடன் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற அரசியல் நகர்வுகளை மேற் கொண்டு வருகிறது.

இதன் காரணத்தினாலேயே இலங்கை ஜனாதிபதித் தேர்தலில், வேட்பாளர் தெரிவு விடயத்தை அமெரிக்கா கையிலெடுத்துள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

நன்றி - கூர்மை

லண்டன் தேர்த்திருவிழாவில் பக்தர் கூட்டம்

லண்டன் ஈலிங் அருள்மிகு கனக துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா கடந்த 11 ஆம் திகதி மிகவும் பக்திமயமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகர்,முருகன், கனக துர்க்கை அம்மன் மூன்று தேர்களில் உலா வந்த அருட் காட்சியை கண்டுகளித்தனர்.

இந்தமுறை வழமையை விட அதிகளவான பெண்கள் பால்குடம் மற்றும் கற்பூரச்சட்டிகளை ஏந்தி தேருடன் உலாவந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (இ)

ஐ.தே.கட்சி முன்மொழிந்தால் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராம்!

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியினால், தனது பெயர் முன்மொழியப்பட்டால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தாம் தயாராக இருக்கிறார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜே.வி.பி. போன்ற மற்றொரு கட்சியிலிருந்து வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டால், அதிபர் தேர்தலில் போட்டியிடத் தயாரா என்று கேள்வி எழுப்பப்பட்ட போது, அந்தக் கட்சியில் தான் உறுப்பினராக இல்லை என்றும் சரத் பொன்சேகா பதிலளித்தார்.

பொதுஜன பெரமுன தனது அதிபர் வேட்பாளராக, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சரியாகவே தெரிவு செய்துள்ளது.

மக்கள் பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டுள்ள நிலையில், பொதுஜன பெரமுன அதில் கவனம் செலுத்தியுள்ளது.

கோட்டாபயராஜபக்ஷஅடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு மிகவும்பொருத்தமானவர்என்று நான் கூறவில்லை, ஆனால் மக்களின் மனதைப் புரிந்து கொண்டு, பொதுஜன பெரமுன சரியானதேர்வைச்செய்துள்ளது.

அண்மையில்நடந்தபேரணிகளில் அதிபர் பதவிக்குப் போட்டியிடத் தயாராக இருக்கின்றனர் என இரண்டு பேர் கூறினர்.

ஒருவர் தனது தந்தையின் பெயரைத் தேர்தல் மேடையில் பயன்படுத்த முயற்சிக்கிறார். உண்மை என்னவென்றால், அவரது தந்தை கொடுத்த ஆயுதங்களைப் பயன்படுத்தியே, புலிகள் சிறிலங்கா இராணுவத்தைத்தாக்கினர்.600காவல்துறை அதிகாரிகளை விடுதலைப் புலிகளிடம் மற்றும் கருணாவிடம் சரணடைய உத்தரவிட்டவர் அவரது தந்தைதான்.

அந்தக் காவல்துறை அதிகாரிகளைக் கொன்றவர் மற்ற அரசியல் முகாமில், ஒரு மலர் மொட்டை கையில் ஏந்தியபடி இருந்தார்.

ஐ.தே.க. கூட்டணியின் அதிபர் வேட்பாளராக, கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவுசெய்யப்பட்டால், கட்சியின் அந்தமுடிவுக்கு இணங்குவேன். நான் ஓர் ஒழுக்கமான நபர், கட்சி மற்றும் அதன் தலைவரின் முடிவை நான் ஏற்றுக்கொள்வேன். என்றும் அவர் கூறினார்.

ஜம்மு – காஷ்மீர் நிலைமை குறித்து மஹிந்தருக்குப் பாக். தூதர் விளக்கம்

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் ஷாஹிட் அஹமட் ஹஷ்மத், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர்மஹிந்தராஜபக்ஷவைச் சந்தித்து, ஜம்மு –காஷ்மீர் நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது காஷ்மீரின் தற்போதைய நிலைமைகள் குறித்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாககொழும்பில்உள்ள பாகிஸ்தான் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய அரசமைப்பின் 370 வது பிரிவை ரத்து செய்வதன் மூலம் ஜம்மு –காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்க இந்தியா மேற் கொண்ட ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் அனைத்துலக சட்டத்தை முற்றிலும் மீறுவனவாக அமைந்துள்ளனஎன்றுமஹிந்த ராஜபக்ஷவிடம் பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது அனைத்துலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட சர்ச்சைக் குரியபிரதேசம்என்பதால், ஜம்மு – காஷ்மீரின் சனத்தொகைப் பரம்பலை மாற்ற முற்படும் எந்தவொரு நடவடிக்கையையும் பாகிஸ்தான் கடுமையாக எதிர்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகள் இப்பகுதியில் நிலைமையைத் தீவிரமாக்கும் சாத்தியங்களைக் கொண்டுள்ளனஎன்றும், பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன என்

றும் பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தெற்காசியாவில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு சார்க் நாடுகளிடையே ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தியுள்ளார் என்றும் கூறப்பட்டது.

'மொட்டு' கட்சியே ஆசியாவில் இரண்டாவது பெரிய கட்சியாம்!

பஸிலை மேற்கோள் காட்டி எஸ்.பி. தகவல்

கொழும்பு,ஓக.15

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின், ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தான் உட்பட சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவினர் ஆதரவு அளிக்கின்றனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல்களில் பொதுஜன பெரமுன 50 லட்சம் வாக்குகளையும், சுதந்திரக் கட்சி 14 லட்சம் வாக்குகளையும் பெற்றன. ஜக்கிய தேசியக் கட்சி 34 லட்சம் வாக்குகளை மட்டுமே பெற்றது.

எனவே, பொதுஜன பெரமுன அற்பமான கட்சி அல்ல. அது ஒரு வலுவான, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி. டிஜிட்டல் தளங்களில் பெரும் செல்வாக்கு செலுத்துகிறது.

ஆசியபிராந்தியத்தில்சீனகம்யூனிஸ்ட் கட்சிக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் பொதுஜன பெரமுன உள்ளது என்று பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்தச் செல்வாக்கின் அளவைக் கொண்டு, இடதுசாரி முன்னணியின் அதிபர் வேட்பாளரை நிறுத்தும் உரிமை பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் நியமனம் முறையாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர், மஹிந்த ராஜபக்ஷவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், 2 மணி நேரக் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

அது அனைவருக்கும் சாதகமாகமுடிந்தது என இருவரும் தெரிவித்தனர். – என்றும் அவர் கூறினார்.

இராணுவத் தளபதி மகேஸ் நேற்று நல்லூருக்கு வருகை தந்து வழிபாடு

பாதுகாப்பு நிலைமை குறித்தும் ஆராய்வு



முன்னாள் தளபதிகளுக்குப் பதவி உயர்வு; பாதுகாப்புப் படையினருக்கு அவமானமாம்!

இப்படிக் கவலை தெரிவிக்கிறார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

முன்னாள் கடற்படைத்தளபதிவசந்த கரன்னகொடவுக்கும், முன்னாள் விமானப்படைத் தளபதி றொஷான் குணதிலகவுக்கும் அளிக்கப்பட்டுள்ள உயர் பதவிகள் பாதுகாப்பு படையினருக்கு அவமானம் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வசந்த கரன்னகொடவுக்கு'அட்மிரல் ஒவ் தி பிளீட்' என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது. குறைந்தது ஒன்பது நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ஒரு விமான தாங்கிக் கப்பல்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான கப்பல்களுக்கு கட்டளையிடும் அதிகாரிக்கு மட்டுமே வெளி நாடுகள் இத்தகைய பதவியை வழங்குகின்றன.

இலங்கைக் கடற்படையில் மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களும், வேறு சில படகுகளுமே உள்ளன. எனவே மூத்த அதிகாரிகளுக்கு இதுபோன்ற பதவிகளை வழங்குவது படையினருக்கே அவமானம்.

ஜனாதிபதியையும், இந்தப் பதவிகளைப் பெற்றவர்களையும் விமர்சிக்கவில்லை. ஆனால் அது படைகளுக்கு அவமானம் என்று மட்டுமே கூறுகிறேன், என்றும் அவர் கூறினார்.

கடந்த வாரம் வசந்த கரன்னகொட 'அட்மிரல் ஒவ் தி பிளீட்' ஆகவும், றொஷான் குணதிலகவுக்கு 'மார்ல் ஒவ் தி எயர்போர்ஸ்' ஆகவும் ஜனாதிபதியினால் பதவி உயர்த்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- எஸ்.நிதர்ஷன் -

யுாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டமையுடன் நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவகால பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளார்.

இதன் போது இராணுவத்தளபதியுடன் யாழ் மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவத்தினரும் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தளபதியின் நல்லூரிற்கான வருகையை முன்னிட்டு ஆலயத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. இதே வேளை பிரதமரின் வருகையை முன்னிட்டு தொடர்ந்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது.

ராஜஸ்தான் வீரரை குறி வைக்கின்றது டெல்லி கப்பிடல்ஸ்!

இந்தியாவில் நடைபெறும் ரி -20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயார்படுத்தல்களை, ஒவ்வொரு அணிகளும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் தற்போது ஒவ்வொரு அணிகளும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலைவிரிக்கின்றன.

இதற்கமைய இதுவரை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லாத டெல்லி கேபிடல்ஸ் அணி, முன்னணி வீரரொருவரை குறிவைத்துள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில், டெல்லி கேபிடல்ஸ் அணி பல அதிரடி மாற்றங்களை கொண்டுவந்தது.

தலைமைப் பயிற்சியாளராக ஜாம்பவான் ரிக்கி பொண்டிங்கை நியமித்ததோடு, இந்திய அணியின் முன்னாள் வீரர் சௌரவ் கங்குலியை ஆலோசகராக நியமித்தது.

அத்தோடு, இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவானை, சன்ரைசர்ஸ் அணியிலிருந்து வாங்கியது. அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. அவர் 5 அரைசதங்கள் அடங்கலாக 521 ஓட்டங்களைக் குவித்து அசத்தினார்.

இந்த மாற்றம் கலந்த புதிய அணி, ஷ்ரேயாஸ் அய்யர் தலைமையில் 2012ஆம் ஆண்டுக்கு பிறகு பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி பெற்றது.

வெளியேற்றுதல் சுற்றிலும் வென்று, 2ஆவது தகுதிச் சுற்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

எனினும், இது வரை ஐ.பி.எல். தொடரில் காணாத மாற்றத்தைக் கண்ட டெல்லி இரசிகர்கள், இம்முறை டெல்லி அணியின் போக்கு குறித்து திருப்தி கொண்டனர்.

இந்நிலையில், எதிர்வரும் தொடரிலாவது சம்பியன் கிண்ணத்தை வென்று, இரசிகர்களை திருப்திப்படுத்த டெல்லி கப்பிடல்ஸ் அணி திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் முன்னாள் தலைவரான அஜின்கியா ரஹானேயை வாங்குவதில் டெல்லி அணி, ஆர்வம் காட்டி வருவதாக கூறப்படுகின்றது.

இதற்காக டெல்லி கப்பிடல்ஸ் அணி, ராஜஸ்தான் அணியிடம் மறைமுகப் பேச்சு நடத்தி வருவதாக கூறப்படுகின்றது. 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக களம் இறங்கிய ரஹானே, 2010ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் விளையாடவில்லை.

2011ஆம் ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியுடன் இணைந்தார். ராஜஸ்தான் தடை செய்யப்பட்ட போது புனேக்கு சென்றார்.

இந்த ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவர் பொறுப்பை ஏற்ற ரஹானே, தொடர் தோல்விகள் காரணமாக திடீரென அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு, ஸ்மித் ராஜஸ்தான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை தற்போது இந்திய அணியிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ள ரஹானே, இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி போட்டிகளில் அவதானம் செலுத்தி வருகிறார்.

மீண்டும் அணிக்கு திரும்ப வேண்டுமென போராடிக் கொண்டிருக்கும் ரஹானேக்கு, எதிர்வரும் ஐ.பி.எல். தொடர் மிக முக்கியமாக தொடராக அமையவுள்ளது.

அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் ரி - 20 உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளது. ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக விளையாடினால் மீண்டும் இந்திய அணிக்கு ரஹானே வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே இந்த வாய்ப்பினை ரஹானே தவறவிடக்கூடாது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

தொடரும் வல்வை எவ்.சி. அணியின் வெற்றிப் பயணம்

வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன் தினம் நடைவெற்ற 16ஆவது ஆட்டத்தில் தமிழ் யுனைட்டட் அணியை எதிர்த்து வல்வை எவ்.சி. அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 02:00 என்ற கோல் கணக்கில் வல்வை எவ்.சி. அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைவெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் வல்வை எவ்.சி அணி மேலும் மூன்று கோல்களைப் பெற்று கொள்ள ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் வல்வை எவ்.சி அணி தனது மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்தது.

வல்வை எவ்.சி அணி சார்பாக ரமேஸ் 02, ரீமோய், மகீபன், ஞானரூபன் ஆகியோர் தலா ஒரு கோலை வெற்றுக் கொடுத்தனர்.

வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற 18ஆவது ஆட்டத்தில் மன்னார் எவ்.சி அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது. இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றுச் சமநிலை வகித்தன.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் மன்னார் எவ்.சி அணி மேலும் ஐந்து கோல்களையும், கிளியூர் கிங்ஸ் அணி மேலும் ஒரு கோலையும் பெற்று கொள்ள ஆட்ட நேர முடிவில் 06:02 என்ற கோல் கணக்கில் தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது மன்னார் எவ்.சி அணி.மன்னார் எவ்.சி அணி சார்பில் சீமெய்ஸ், மிதிர் ஆகியோர் தலா இரண்டு கோல்களை யும் டீனு , சச்சின் ஆகியோர் தலா ஒரு கோல்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பரபரப்பான ஆட்டத்தில் வென்றது முல்லை பீனிக்ஸ்

வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற 17ஆவது ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரென்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் முல்லை பீனிக்ஸ் அணி தனது மூன்றாவது வெற்றியை பதிவு செய்தது.

முல்லை பீனிக்ஸ் அணி சார்பாக சாந்தன், ஜிந்துஜன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர். (ஐ)

கிளிநொச்சி விளையாட்டரங்கை இலவசமாக பயன்படுத்தலாம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் தமது பயிற்சிகளுக்காக கிளிநொச்சி விளையாட்டரங்கு மற்றும் நீச்சல் தடாகம் ஆகியவற்றை இலவசமாக பயன் படுத்த முடியும் என விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் தம்மிக்க முத்துகல தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- விளையாட்டுத்துறை அமைச்சின் ஒதுக்கப்பட்ட நிதியின் 350 மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட கிளிநொச்சி விளையாட்டரங்கு மற்றும் நீச்சல் தடாகம் ஆகியன அண்மையில் வலைப் பந்தாட்ட வீராங்கனையான தர்ஜினி சிவலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மாணவ, மாணவிகளின் விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளோம். அவர்கள் தத்தமது பயிற்றுநர்களுடன் விளையாட்ட ரங்கிலும், நீச்சல் தடாகத்திலும் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரையிலான 12 மணித்தியால காலப் பகுதியில் அங்கு பயிற்சிகளை மேற்கொள்ள முடியும் - என்றார்.

அசத்தல் வெற்றியை பதிவு செய்தது மன்னார் எவ்.சி.

ஒற்றுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் யாரையும் கண்டு நாம் விசனம் கொள்ளத் தேவையில்லை. அவசரப்படாமல், நிதானமாகச் சிந்தித்து, பேச்சு நடத்தி, மக்களுக்கு நன்மை பயக்கத்தக்கதான முடிவை நாங்கள் எடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டமானாறு கலை வாணி சனசமூக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழா நிகழ்வில் நேற்றுப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே சுமந்திரன் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி உழைத்தோம். இந்த ஆட்சியை நாங்கள் கொண்டு வந்தோம். இந்த ஆட்சியின் மூல மாக எங்கள் மக்களின் நீண்ட கால அபிலாசைகளைப் பூர்த்தி செய்யலாம் என்ற ஒரே நோக் கோடுதான் இந்த ஆட்சியைக் கொண்டு வந்தோம். அதற்கான முயற்சியையும் நாங்கள் முழு மையாக எடுத்திருந்தோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலமாகத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு முற்றுமுழுதான ஒரு தீர்வைக் காணலாம் என்று 2015 ஆம் ஆண்டிலிருந்த நாங் கள் முழுமையாக உழைத்து வந் திருக்கிறோம்.

அதில் முன்னேற்றங்கள் பல இருக்கின்றன. ஆனால் அது இன்னமும் செய்து முடிக்கப்பட வில்லை. செய்து முடிக்கப்படா மல் அது இப்பொழுது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அது சம் பந்தமாக நாங்கள் சென்ற முறை நாடாளுமன்றத்திலே ஒத்திவைப்பு வேளையில் பிரேரணை ஒன் றைக் கொண்டு வந்து கேள்வி யெழுப்பினோம். இரண்டு நாள் விவாதமாக அது நடைபெற்றது.

தற்போது உலக நாடுகளு டைய கவனத்தை இதன்பால் நாங்கள் ஈர்த்திருக்கிறோம்.

போர்க்காலத்திலே ஆயுதப் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட வேண்டும், அதை முடி விற்கு கொண்டு வந்த பிறகு அர சியல் தீர்வொன்றைக் கொடுக்க முடியுமென்று இலங்கை அரசாங் கம் உலக நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதியை மையமாக வைத்துத்தான் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கு உலக நாடுகள் இலங்கை அரசிற்கு உதவி செய்தன.

அந்த வாக்குறுதியின் அடிப் படையில் அவர்கள் உதவி செய்ததால் போரை முடிவிற்குக் கொண்டு வர முடிந்தது. அதன் காரணத்தினால்தான் அவர்களுக் குக் கொடுத்த வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் காப்பாற்ற வேண்டியிருக்கின்றது.

ஆனால், பலவிதமான சாக் குப்போக்கைச் சொல்லிச் சென்ற அரசாங்கம் அதனைச் செய்ய வில்லை.

இந்த நாட்டின் சரித்திரம் – ஆட் சியில் இருக்கும் கட்சி ஒரு முன் மொழிவை வைத்தால் எதிர்த் தரப்பில் இருக்கின்ற கட்சி அதை எதிர்ப்பது என்பதுதான். ஆனபடி யினால்தான் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றாக வருகிற ஒரு சந்தர்ப்பம் வந்த போது நாங்கள் அந்த அரசாங்கத்திற்கு ஒத்து ழைப்பை வழங்கினோம்.

ஆனால், இனப்பிரச்சினை யைத்தீர்ப்பதற்கு ஆட்சியாளர்களி டம் அரசியற் துணிவும் இல்லை. அதற்கான எண்ணமும் இருக்க வில்லை.

புதிய அரசமைப்புஉருவாக்கத் திற்கு நாங்கள் முழுவதுமாக எங் களுடைய பங்களிப்பைச் செய் தோம். எவரும் எதிர்பார்த்ததற்கு மேலாகச் செய்தோம்.

சென்ற வாரத்திலே அமெ ரிக்க உதவி இராஜங்கச் செயலா ளர் தலைமையிலான குழுவின ரைச் சந்தித்திருந்தோம். அதன் போது, "இந்தவிடயத்தில்எங்களது பங்களிப்பில் ஏதாவது குறை இருக்கின்றதா?அவ்வாறு குறை யைக் கண்டீர்களா?" – என்று எங்கள் கட்சியின் தலைவர் சம் பந்தன் ஐயா அவர்களிடத்தே கேட்டார்.

அதற்கு அவர்கள் இல்லை என்றனர்.

"நாங்கள் எதிர்பார்த்ததை விட நீங்கள் கூடுதலாக – முழுமூச் சாக – இதிலே பங்கெடுத்துள்ளீர் கள். உங்களில் எதுவித தவறை யும்இதில்நாங்கள்காணவில்லை. அதற்கு மாறாக நீங்கள் கூடுதலா கவே பங்களித்திருக்கின்றீர்கள்" என்றும் அவர்கள் குறிப்பிட்டிருந் தனர்.

''இவ்வாறு நாங்கள் ஒத் துழைத்து,பங்களிப்பை வழங்கி யும் இது முடிவிற்கு வராமல் இருக் கிறதே!" – என்று அதன் போது ஐயா திருப்பிக் கேட்டார்.

"மேலும், நாங்கள் எங்களால் இயன்றதைச் செய்திருக்கின் றோம். இதைமுடிவிற்குக்கொண்டு வர வேண்டிய பொறுப்பு உங்களு டையது இல்லையா?" – என்றும் ஐயா கேட்டார்.

"நீங்கள்தான் எங்களை இந் தப் பேச்சுகளில் கலந்து கொள் ளச் சொன்னீர்கள், நீங்கள்தான் ஐ.நா. மனித உரிமைப் பேரவை யில் இலங்கை சம்பந்தமாகத் தீர் மானங்களைக் கொண்டு வந்து இலங்கையையும்அதற்குஇணங் கப் பண்ணினீர்கள். ஆகவே நாங்கள் எங்களுடைய பங்கைச் சரியாகச் செய்திருக்கிறோம். ஆனால் இலங்கை அரசாங்கம் தன்னுடைய பங்கைச் சரியாகச் செய்யவில்லை. அதற்கான அரசியல்துணிவுஅவர்களிடத்தே இல்லை. அதற்கான எண்ணமும் அவர்களிடத்தே இருப்பதாகத் தெரியவில்லை" – என்று ஐயா கூறினார். அதற்கு "நாங்கள் எங் களால் இயன்றதைத் தொடர்ந்து செய்வோம்,உங்களோடுதொடர்ந்து பயணிப்போம், மாற்றுவழிகளைக் குறித்து சிந்திப்போம்" – என்று அவர்கள் எங்களிடத்தே உறுதி யளித்துள்ளனர்.

எங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்பது தவறான சிந் தனை. இந்த சர்வதேசப் பலம் தொடர்ந்து நாங்கள் எங்களோடு வைத்திருக்க வேண்டியதொன்று. எங்களுடைய ஒற்றுமை எங் களுக்கு இன்னொரு பலமாக இருக்கிறது. பல இடங்களுக்கு நாங்கள் செல்கிற பொழுது தமி ழர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்று பலர் எங்களைக் கேட்கின்றார்கள். அது தவறான எண்ணம். நாங்கள்தான் இந்த நாட்டிலேவாழ்கின்றசமூகங்களில் கூடுதலான பங்கு ஒற்றுமையாக இருக்கிறோம்.

எங்களது அரசியல் ஒற்று மைக்கு நிகரான அரசியல் ஒற் றுமை மற்ற சமூகங்களிடத்திலே இல்லை.

இன்றைக்கு நாடாளுமன் றத்திலேவடக்குகிழக்கிலே இருந்து தெரிவு செய்யயப்பட்ட 18 பிரதி நிதிகளில் 16 பேர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். அதைவிடக் கூடுத லான ஒற்றுமையை எங்கேயும் நீங்கள் பார்க்கமுடியாது. ஆனால் அதில் இருந்து 2 பேர் தற்போது விலகி நிற்கின்றார்கள். என்றா லும் 14 பேர் ஒன்றாக நாங்கள் நிற்கின்றோம்.

விக்கினேஸ்வரன், கஜேந்திர குமார், சுரேஷ் பிரேமச்சந்திரனை நாங்கள் விலக்கவில்லை.

ஒற்றுமை இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் எங்களில் இருந்து விலகிப் போன வர்கள்தான். அதுவும் தாங்களாக விலகிப்போனவர்கள். அவர்கள் ஒருவரையும் நாங்கள் விலகிப் போகச்சொல்லிச்சொல்லவில்லை. அது விக்கினேஸ்வரன் ஐயா உட்பட கஜேந்திரகுமார் பொன் னம்பலத்தில் ஆரம்பித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் வரைதாங்களாக விலகிப் போனவர்கள்தான். இவர் கள் எவரையும் நாங்கள் விலகிப் போங்கள்என்றுசொல்லவில்லை.

ஆகவே ஒற்றுமையாக இருங் கள் என்று எங்களிடத்தே சொல் கின்றவர்களுக்கு நான் இப்போது அண்மைக்காலத்திலே பல இடங் களிலும் சொல்லி வருவது எங் களுக்கு அதைச் சொல்லிப் பிர யோசணமில்லை என்றும், அதை அவர்களிடத்தே நீங்கள் சொல்ல வேண்டுமென்றும் கூறி வரு கிறேன். அதாவது விலகி போன வர்களிடத்தே சொல்ல வேண்டும். போகின்றவர்களை இழுத்துப் பிடித்து வலுக்கட்டாயமாக எங் களால் கட்டி வைக்க முடியாது. ஆகவே போகின்றவர்களைப் போக விடத்தான் வேண்டும். ஆனாலும் ஒருவரைக்கூட – அது ஆனந்தசங்கரியாகக் கூட இருக் கலாம் – யாரையேனும் போங் கள் என்று நாங்கள் சொல்ல வில்லை.

ஆகையினாலே ஒற்றுமைக்கு நாங்கள் மாறாக இருக்கிறோம் என்பது ஒரு தவறான சிந்தனை. ஒற்றுமை குலைந்திருப்பதாக நினைப்பதும் ஒரு தவறான சிந் தனை. ஏனென்றால் மக்களு டைய மனதிலே ஒன்று திடமாக இருக்கிறது. அதாவது நாங்கள் ஓரணியாக நின்றால் மட்டும்தான் இன்றைக்கு நாங்கள் ஏதாவது சாதிப்பதற்கான சந்தர்ப்பம் இருக் கிறது என்பதுதான் அது.

எங்கள் ஒற்றுமையில் குளறு படி நடந்தால் எங்கள் பலம் பாதிப் படையும்.

ஆகவே சரியான தேர்தல் களில், சரியான நேரங்களில்எங் கள் மக்கள் அந்தத் தவறை விடு வதில்லை. நாடு முழுவதும் நடக் கின்ற தேர்தல்களில் – அது நாடா ளுமன்றத் தேர்தலாக அல்லது ஜனாதிபதித் தேர்தலாக இருக்கட் டும் – எங்களுடைய மக்கள் அப் படி எதனையும் இது வரைக்கும் செய்யவில்லை. அது (அந் நிலைமை)தொடர்ந்து இருக்க வேண்டும். ஏனென்றால் அதிலே ஒரு குளறுபடி வருமாக இருந் தால் எங்களுடைய பலம் மிக வும்பாதிப்படையும். அதற்குநாங் கள் இடங்கொடுக்கக் கூடாது.

இங்கே சுகிர்தன் பேசுகின்ற பொழுது ராஜபக்ஷ குடும்பத் தைப் பற்றிச் சொன்னார். அந்த ராஜபக்ஷ குடும்பத்தை ஆட்சி யில் இருந்த அகற்றிய பெருமை எங்களுடைய மக்களைத்தான் சாரும். திரும்பவும் அவர்கள் பின்கதவால் வந்த ஆட்சியைக் கைப்பறிய பொழுது கூட நீதிமன் றத்திற்குச் சென்று அவர்களைத் துரத்தியடித்த பெருமையும் எங் கள் மக்களைத்தான் சாரும்.

தீர்மானிக்கின்ற சக்தி எங்கள் மக்கள்தான் என்பதால் ஆழமா கச் சிந்தித்து செயற்பட வேண்டி யது அவசியம்.

ஆனபடியால், இனி வரப் போகின்ற தேர்தலிலும் கூட எங் கள் மக்களுடைய கைகளிலே நிறையப் பலம் இருக்கிறது. தீர் மானிக்கிற சக்தியாக நாங்கள் இருக்கிறோம். ஆனால் வெறு மனே ராஜபக்ஷ குடும்பத்தை அகற்றி வைப்பது மட்டும்தான் எங்களுடைய நோக்கமாக இருக் குமாக இருந்தால் நாங்கள் எதையும் சாதிப்பதாக இருக்க முடியாது. ஆகையினாலே வரப் போகின்ற நாள்கள் தீர்மான மான நாள்கள். மிகவும் கவனமா கச் சிந்தித்து செயலாற்ற வேண் டிய நாள்கள்.

எங்கள் மக்களே இந்தத் தீர் மானத்தைச் செய்கிறவர்கள், அவர்கள்தான் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கிறார்கள் என் பதைத் தெரிந்து கொண்ட நாங் கள் – எங்களுடைய கட்சி – எப்படி யாக இந்த விடயங்களைக் கையாள வேண்டுமென்று ஆழ மாகச் சிந்தித்துச்செயற்படவேண் டியஒருகாலகட்டம்வந்திருக்கிறது. இதை நாங்கள் செய்கின்ற பொழுது எங்களுடைய மக்கள் முழுமையாக எங்களுடன் நிற் பார்கள் என்ற நம்பிக்கை எங் களுக்கு இருக்கிறது.

ஆனாலும் குழப்ப நினைப் பவர்கள் குழப்புவார்கள். அவர் களைக் குழப்புவதற்குத் உந்து பவர்களும் பிரதானமாகச் செயற் படுவார்கள். ஆனால் எங்களு டைய மக்கள் ஒருபோதும் தேர் தல்களிலே இவ்வாறானதவறான சிந்தனைகளுக்கு இடம்கொடுத் ததில்லை. அதுவே தொடரும்.

விசேடமாக ஜனாதிபதித் தேர் தல் என்று வருகிற பொழுது நாங் கள் இப்போது அறிவித்ததைப் போலஅனைத்துவேட்பாளர்களும் யார், யார் என்பதை முதலிலே நாங்கள் அறிந்த கொள்ள வேண் டும். அவர்களுடைய வேலைத் திட்டங்கள் என்ன என்று எங்களுக் குத் தெரிய வேண்டும்.

நாங்கள் அவசரப்பட மாட் டோம். யார் வந்தாலும் விசனப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

குறிப்பாகத் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்று அவர்கள் ஒவ்வொருவரும் எதைச் சொல்கிறார்கள் என்பதை, அதி லும் வெளிப்படையாக எதைச் சொல்கிறார்கள்என்பதைநாங்கள் அறிய வேண்டும். அது குறித்து அவர்கள் ஒவ்வொருவருடனும் நாங்கள் பேச்சு நடத்த வேண்டும். அதன் பிறகு நாங்கள் எங்களு டைய மக்களுடனும் கலந்துரை யாடி முடிவை எடுக்க வேண்டும். அதற்கு முன்னதாக நாங்கள் அவசரப்பட மாட்டோம். இந்த முடிவுகள் எங்கள் மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருக்க வேண்டும்.

ஆகவே நிதானித்த செயற் படுவோம். அவர் வந்தவிட்டார், இவர்வந்துவிட்டாரென்றுநாங்கள் விசனப்பட வேண்டிய அவசியம் கிடையாது. எவர் வந்தாலும் அவர் களைக் கையாளக் கூடிய திறன் எங்களுடைய ஜனநாயக சக்தி யாக நாங்கள் ஒன்றாகச் செயற் பட வேண்டியதில் இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் நாம் செல்ல வேண்டும். – என்றார்.

பட்ஜெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் முன்வைத்து நிறைவேற்றிக்கொள்ளவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதியில் ஜனாதி பதித்தேர்தல்நடைபெறவுள்ளமை யினாலேயே இவ்வாறு இடைக் கால கணக்கறிக்கையை சமர்ப் பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

நேற்று முன்தினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவிற்கும் அமைச்சர் சஜித் பிரேமதாசாவிற்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளதுஎனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்த குழப்பநிலைக்குத் தீர்வைக் காணும் நோக்கத்துடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள் ளது.

செவ்வாயன்று நடந்த சந்திப் பில் புதிய கூட்டணியை அமைப் பதுமற்றும்கூட்டணிக்கானயாப்பு குறித்தும் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விவகாரங்கள் தொடர் பில் சனிக்கிழமை மீண்டுமொரு சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலையக மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்று ஜன நாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற் போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்டநாடாளுமன்றஉறுப்பினரு மான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயகமக்கள்முன்னணி யின் கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் கண்டி யிலுள்ள அலுவலகத்தில் நடை பெற்றசந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

அரசியல் களத்தில் ஜனாதி பதித் தேர்தலானது முன்கூட்டியே கூடுபிடித்துள்ளது. இரு முனைப் போட்டிக்கு பதிலாக இம்முறை மும்முனைப்போட்டியே நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளராக கோட்டாபய ராஜ பக்ஷ பெயரிடப்பட்டுள்ளார். சிங் கள, பௌத்த வாக்குகளை முழு மையாக வேட்டையாடுவதற்காக அவர்கள் இனவாத அரசியலைக் கையிலெடுக்கக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறு பான்மையின மக்களே தீர்மா னிக்கும் சக்தி என்பதால் நாம் அனைவரும் விழிப்பாகவும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டிய காலகட்டம் இது. எம்மை அடக்கி ஆண்டவர்கள் தலையைத்தடவி ஆசை வார்த் தைகளைக் கூறலாம். அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என வாக்குறுதிகளை வாரி வழங் கலாம். ஆனால், கடந்துவந்த பாதையை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

2015 ஆம் ஆண்டு நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி தலை மையில் பொதுவேட்பாளராக தற் போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன போட்டியிட்டார். ஆனால், அந்தப் பயணம் நீடிக்க வில்லை. நாட்டில் பலவழிகளிலும் அரசியல்குழப்பங்களைஏற்படுத்தி விட்டுத் தற்போது மீட்பர் போல் பாசாங்கு காட்டிவருகிறார் அவர்.

ஆகவே இறக்குமதி வேட்பாள ரைப் பொதுவேட்பாளராக கள மிறக்கும் யுக்தி இனியும் மக்கள் மத்தியில் எடுபடாது என்பதுடன், அது அரசியல் ரீதியிலான சர்ச் சைகளுக்கே மீண்டும் வழிவகுக் கும். ஐக்கிய தேசியக்கட்சிக்கு மட்டு மல்ல, அதற்கு ஆதரவு வழங்கிய தோழமைக் கட்சிகளுக்கும் பொது வேட்பாளரின் முடிவுகளால் பல நெருக்கடிகள் ஏற்பட்டன.

எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த, மக்களால் கோரப்படும் வேட்பாளரை இந்தத் தடவைகளமிறக்குமாறுகோரிக்கை விடுக்கின்றோம். இன, மத, மொழி, குல பேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களுக்கும் தான் சிறப்பாகசேவைகள்வழங்கக்கூடிய அரசியல்வாதி என்பதை சஜித் பிரேமதாஸ செயற்பாடுகள்மூலம் நிரூபித்துள்ளார். இதனால்தான் 'சஜித் வேண்டும்' என மக்கள் கேட்கின்றனர்.மக்கள்கோரிக்கைக்கு செவிமடுத்து சஜித்தைக் களமிறக் கினால் வெற்றியை நோக்கிப் பய ணிக்கக்கூடியதாக இருக்கும்.

கடந்தமுறை போன்றது அல்ல இம்முறை களநிலைவரம். ஜே.வி. பியும் வேட்பாளர் ஒருவரைக் கள மிறக்கவுள்ளது. சுதந்திரக்கட்சியும் மாற்று நடவடிக்கையில் இறங் கக்கூடும். வெற்றியை நோக்கி பயணிப்பதற்குக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். எனவேதான் மக்கள் பக்கம்நின்று முடிவு எடுக்குமாறு மீண்டும் மீண் டும் கோருகின்றோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikathir

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளில் சாட்சியமளிக்க வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு!

அவருக்கு வசதியான தினத்தைத் தீர்மானிக்க நான்கு திகதிகளும் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.15

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆஜராகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கும் கடிதம் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இக்கடிதத்தில், நான்கு திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், இதில் பொருத்தமான ஒரு தினத்தை ஜனாதிபதிக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எதிர்வரும் 20, 21, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் ஒரு தினத்தை தெரிவு செய்து அறிவிக்குமாறும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதிலைப் பொறுத்து தெரிவுக் குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கை

அமையவுள்ளதாகவும், ஜனாதிபதி சாட்சி வழங்குவதற்கு ஜனாதிபதி செயலகத்துக்கு வருமாறு தெரிவுக் குழுவை அழைத்தால் அங்கு சென்று செயற்படவும் தாம் தயாராக வுள்ளனர் எனவும் தெரிவுக்குழுப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

தெரிவுக் குழுவில் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாட்சியம் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்ந்தும் மஹிந்த வசமா?

ஆளும் தரப்பிலிருந்து அதிருப்தி

கொழும்பு,ஓக.15

சு.க.சார்பில் எம்.பியாகி அதனடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராகவுள்ள மஹிந்த ராஜபக்ஷ இப்போது பிறிதொரு கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுள்ளமையால் எழுந்துள்ள அவரது உறுப்புரிமை தொடர்பான முரண்பாடு குறித்து அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ஐ.தே.க. முறைப்பாடொன்றை முன்வைக்கவுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கூட்டமைப்பின் சார்பாகவே அவர் எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் பெற்றுள்ளார்.

தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சியொன்றின்தலைமைப்பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தொடரச்சட்டபூர்வமாகஇடம்இருக்கின்றது என்றால் அதனை சபாநாயகர் அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி கட்டுக்கலை பிள்ளையாரை கோட்டாவும் மஹிந்தரும் தரிசிப்பு

கண்டியில் நேற்று ஆதரவாளர்களைச் சந்தித்த பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, தமது சகோதரர் மஹிந்தராஜபக்ஷசகிதம் கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோயிலுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நேற்று மாலை அவர் கண்டியில் பல கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

பரோலில் வந்த நளினி வேலூர் சிறையில் முருகனை நேற்றுச் சந்தித்துப் பேசினார்

பரோலில் வந்த நளினி வேலூர் சிறையில் முருகனை நேற்று சந்தித்துப் பேசினார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஆயுள் தண்டனை பெற்று, வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி, மகளின் திருமணத்துக்காக, ஒரு மாதம் பரோலில் வெளியே வந்து, வேலூர் சத்துவாச்சாரியில் தங்கி உள்ளார். தினமும் அவர், சத்துவாச்சாரி பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறார். சிறையில் இருக்கும்போது, 15 நாள்களுக்கு ஒரு முறை, அவரது கணவர் முருகனை சந்தித்து பேசுவது வழக்கம். ஆனால் இப்போது சிறையில் விட்டு வெளியே இருக்கின்றமையால் பாதுகாப்பு காரணங்கள் காட்டி நளினி, முருகன் சந்திப்பு நடத்த பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில், தன் மகள் ஹரித்திரா திருமண ஏற்பாடுகள் குறித்து, முருகனுடன் பேச வேண்டியுள்ளது. அதனால் முருகனைச் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என நளினி மனு அளித்தார். அந்த மனுவை, சிறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து நேற்று நளினி, முருகன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சத்துவாச்சாரி புலவர் நகரில் தங்கியிருந்த நளினியை சத்துவாச்சாரி பொலிஸ் நிலையம் அழைத்து வந்தனர். அங்கு கையெழுத்து போட்டதும், நளினியை பாதுகாப்புடன் வேலூர் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

நளினி, முருகன் சந்திப்பு 1 மணி நேரம் நடந்தது. அப்போது மகள் திருமண ஏற்பாடுகள் குறித்து இருவரும் உருக்கமாகப் பேசிக்கொண்டனர். சந்திப்பு முடிந்ததும், நளினியை சத்துவாச்சாரியில் அவர் தங்கியிருக்கும் வீட்டிற்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

YOGIS

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலைப் பயிற்சிகள்,
கேக் ஐசிங் பயிற்சிகள்
புதிய வகுப்புக்கள் 17.08.2019 ஆரம்பமாகவுள்ளன.
சேர விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

மகளிருக்கான GYM Exercise நடைபெறுகிறது.

இல. 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 716 4923, 021 222 2796

LATHA TAILORING & EMBROIDERY DESIGNING

SAREE BLOUSE
EMBROIDERY WORK
WOMEN'S & MENS ALTERATION
COUSTUMES
CHUBIDAR & MORE AVAILABLE



Unit 8 Champion Mall
495 High Road
Wembley HAO 2DH
Tel:07459 078 919

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2019 இல் வெளியிடப்பெற்றது.